Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 16 வெள்ளிக்கிழமை (29.03.2013) பக்கங்கள் 20 ஓசை – 180
















# இந்திய வெளியுறவுக் கொள்கையில் தமிழகத்தின் செல்வாக்கு பலிக்காது

## "இந்து" முன்னாள் ஆசிரியர் ராம் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் தமிழக அரசு செல்வாக்குச் செலுத்த முடியாது என்று த இந்துப் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ராம் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவுக் கொள்கை என்பது மத்திய அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட ஒரு விடயமாகும் என்றும் பி.பி.சி. உலக சேவைக்கு வழங்கிய செவ்வியில் ராம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயத்தில் தமிழக அரசு தனது பங்களிப்பை வழங்க முடியும் எனினும் யதார்த்தத்திற்குப் புறம்பான கோரிக்கைகளை முன்வைக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் அரசியல் கட்சிகள் இலங்கைப் பிரச்சினையை வைத்து போட்டி அரசியலில் ஈடுபடுவதன் விளைவாகவே நேற்று முன்தினம் தமிழக சட்டப் பேரவையில் இலங்கை தொடர்பில் பிரேரணை நிறைவேற்றப்பட்டதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.



சென்னையில் நடைபெறவுள்ள போட்டிகளிலிருந்து இலங்கை வீரர்களை நீக்குவதற்கு எடுத்துள்ள தீர்மானம் சரியானதல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பரீட்சைப் பெறுபேறு ஏப்ரல் 10 ஆம் திகதி

2012 க.பொ.த (சா.த) பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு.எம்.புஸ்பகுமார தெரிவித்தார். பெறுபேறுகளை வெளியிடுவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ள

(19) ஆம் பக்கம் பார்க்க

# பட்டதாரி பயிலுநர்களுக்கு கட்டம் கட்டமாகவே நியமனம்

பயிற்சிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த பயிலுநர் பட்டதாரிகள் 8300 பேர் மட்டுமே முதற்கட்டமாக அரச சேவையில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# சமுர்த்தி வங்கிகள் கணனி வலையமைப்பில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல சமுர்த்தி வங்கிகளையும் கணனித்திட்டத்திற்குள் உள்வாங்கும் பொருட்டு கணனி தொடர்பான பயிற்சி இன்றும் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறி இன்று யாழ். மாவட்டச் செயலகத்திலும் நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள IIS கணனிப் பயிற்சி நிலையத்திலும் நடைபெறவுள்ளது. (பா)

# பிரதியமைச்சர் கருணா பிரதான யுத்தக் குற்றவாளி

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

போர்க்குற்ற விசாரணைகள் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனிடமிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது யுத்தக்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர்கள் புலிகள் இயக்க அமைப்பினருடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கருத்து வெளியிட்டிருந்தார்.

இது குறித்து நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய நாடுகளுக்கான பணிப்பாளர் பிரட் அடம்ஸ், கருணாவின் கருத்தை வைத்துக் கொண்டு அவரை சுதந்திரமாக செயற்பட விட முடியாது என தெரிவித்துள்ளார்.

கருணா விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தபோது, பல குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட ஒருவர் என்பதனால் இலங்கை அரசின் போர்க்குற்ற விசாரணை அவரிடமிருந்தே ஆரம்பிக்க வேண்டும்

(19) ஆம் பக்கம் பார்க்க

# மாணவர்களை அவமதித்த பத்திரிகை வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்




(வவுனியா)

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகைக்கு எதிராக நேற்று காலை வவுனியாவில் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

குறித்த பத்திரிகையில் வெளிவந்த கவிதையொன்று பிரதேச வாதத்தை தூண்டுவதாகவும், வன்னி பிரதேச மாணவர்களை மாடுகள் எனவும் புகழ்மிக்க ஆலயமான வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தை

(19) ஆம் பக்கம் பார்க்க

# இன்னும் தணியாத டெங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மூவர் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர, சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து இருவரும், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவருமாக இந்த மூவரும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# புலிகளின் அரசியல் கட்சிக்கு நிரந்தரத் தடைவிதிக்க முடிவு

(கொழும்பு)

புலிகளின் அரசியல் கட்சி உட்பட நான்கு அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் திணைக்களம் நிரந்தரத் தடைவிதிப்பதற்கு தீர்மானித்துள்ளது. ஈழதேசிய ஜனநாயக முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய மாற்று முன்னணி ஆகிய அரசியல் கட்சிகளின் பெயர்களையும் சின்னங்களையும் மீண்டும் வழங்காதிருக்க தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

பதிவு இரத்து செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்கள் மற்றும் சின்னங்களை புதிதாக பதிவு மேற்கொள்ளும் அரசியல் கட்சிகளுக்கு இரண்டு வருடங்களுக்கு வழங்கவியலாது என தேர்தல்கள் செயலகம்

(19) ஆம் பக்கம் பார்க்க

# விபசார விடுதி முற்றுகை மாணவர்கள் உட்பட 7 பேர் கைது

யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள தனியார் ஹொட்டல் ஒன்றில் இயங்கிவந்த விபசார விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது. யாழ். பிரதேச செயலக அதிகாரிகளால் நேற்று மேற்கொள்ளப்பட்ட இம்முற்றுகையின் போது ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஏழு பேரில் பெண்கள் மூவரும் ஆண்கள் நால்வரும் அடங்குவதாக யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தெரிவித்தார். கைதானவர்களில் பல்கலைக்கழக மாணவன் ஒருவரும் மாணவி ஒருவரும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார். இவர்களது பல்கலைக்கழக அடையாள அட்டை யாழ். பிரதேச செயலகத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ஏனையவர்களில் யாழ் - கொழும்பு தனியார் பஸ் சாரதி ஒருவரும் விபசாரத் தொழிலில் ஈடுபட்டு வந்த பெண்ணும் அடங்குவதாக அவர் கூறினார். கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டதாக யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தெரிவித்தார்.

# சிறுவர்களுக்கு சமய வாழ்க்கை முறை மகத்துவத்தை போதிக்க வேண்டும்

(வடமராட்சி)

சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு இறைநம்பிக்கையை ஊட்டுவதுடன், சமயவாழ்க்கை முறையின் மகத்துவத்தையும் போதிக்கவேண்டும். இதற்கு அறநெறிப் பாடசர்லைகள் கிராமங்களில் சிறப்பாக செயற்படவேண்டும் என புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தான அறநெறிப் பாடசாலை ஆரம்ப விழாவில் உரையாற்றிய புற்றளை மகா வித்தியாலய அதிபர் எம்.ஆனந்தேஸ்வரன் குறிப்பிட்டார்.

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தியாகராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் டாக்டர் எஸ். கணேசலிங்கம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து அனந்தேஸ்வரன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

'இறை நம்பிக்கையையும் சமய வாழ்க்கையின் மகத்துவங்களையும் எதிர்கால சந்ததியினருக்கு போதிக்கவேண்டியது மிக முக்கியமாகும். பாடசாலைகள் மட்டுமன்றி அறநெறிப் பாடசாலைகளும் இச்செயற்பாடுகளில் முன்னணி வகிக்க வேண்டும்.

மனிதனை பண்படுத்தி சிறந்த வாழ்க்கை வாழ இறை நம்பிக்கையும், சமய வாழ்க்கை முறைகளும் வழிவகுக்கின்றன. அறநெறிப் பாடசாலைகள் இதற்கு சிறந்த சாதனங்களாக திகழ்கின்றன.

தென்பகுதிகளில் அறநெறிப் பாடசாலைகள் மிகச்சிறப்பாக செயற்பட்டு அம்மக்களின் வாழ்க்கையை வளம்படுத்துகின்றன. அந்நிலை இங்கும் ஏற்படவேண்டும். இன்று இங்கு அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது சிறப்பாக இயங்கி எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வை வளம்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இளைப்பாறிய ஆசிரியர் எஸ்.தர்மகுலசிங்கம், இளைப்பாறிய தபால் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம், ஆலய பரிபாலன சபைத் தலைவர் மார்க்கண்டு தவலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். (01)

# மின்சார சபையினர் திடீர் நடவடிக்கை

கடந்த சில தினங்களாக முல்லைத்தீவு தண்ணீருற்று முள்ளியவளை ஆகிய நகரப் பகுதிகளில் நீண்டகாலமாக மின்கட்டணத்தை செலுத்தத் தவறிய சுமார் 50 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களின் மின் இணைப்புகள் மின்சார சபையால் துண்டிக்கப்பட்டன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மிக நீண்ட காலமாக மின்சார சபையினரால் அறிவித்தல்களும் எச்சரிக்கை கடிதங்களும் வழங்கப்பட்டும் மின்சாரக் கட்டணத்தை செலுத்தத் தவறிய வர்த்தக நிலையங்களே மின் துண்டிப்புக்கு இலக்காகியுள்ளன.

இருப்பினும் பல வர்த்தக நிலையங்களுக்கு எவ்விதமான முன் அறிவித்தலும் இன்றி மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் வர்த்தக செயற்பாடுகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

# சமாதான பாதயாத்திரை இன்று கிளிநொச்சி வரும்

சமாதானத்தை உறுதிப்படுத்தும் முகமாக கடந்த 6 ஆம் திகதி கதிர்காமத்தில் இருந்து ஆரம்பமான சமாதான பாத யாத்திரை நேற்று வவுனியாவை வந்தடைந்தது.

கதிர்காமத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரையுமாக செல்லவுள்ள இச் சமாதான பாத யாத்திரை திபெத் ஆன்மீகத்தலைவர் சாகல்ய கியல்வங்கின் தலைமையில் கதிர்காமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

இப் பேரணிக்கு ஜனாதிபதி செயலகம், இலங்கை இளைஞர் சமுதாய சம்மேளனம், இளைஞர்களுக்கான நாளை அமைப்பு மற்றும் ஊவா மாகாண சபை என்பன ஆதரவு வழங்கி வரும் நிலையில் நேற்றுக் காலை வவுனியாவில் இருந்து புறப்பட்ட பேரணி கிளிநொச்சியை சென்றடைந்தது.

இப் பேரணியில் வவுனியாவில் வைத்து வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர உட்பட இராணுவ அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்யாத்திரை இன்று கிளிநொச்சியில் இருந்து யாழ். நோக்கிப் புறப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப் பேரணியில் இந்தியா, நேபாளம், இந்தோனேஷியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பௌத்த மதத் தலைவர்களும் இணைந்து கொண்டதுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளும் கலந்து கொண்டுள்ளனர். (160)

# வாகனப் போக்குவரத்து நிறுத்தம்; கடலுணவு வியாபாரிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

வரணியிலிருந்து மாசேரி ஊடாக குடத்தனைக்குச் செல்லும் சாளம்பை ஆறாம் கட்டைக்குச் செல்லும் வீதி சுமார் அரை மைல் தூரம் வரைக்கும் சேதமடைந்துள்ளது.

வாகனங்கள் போக்குவரத்து செய்ய முடியாதவாறு நீர் தேங்கிய நிலையில் மிகமோசமாக உள்ளது. இதனால் குடத்தனையிலிருந்து வரும் வாகனங்கள் வல்லிபுர வீதியூடாக முள்ளி வந்து வரணியை அடைகின்றன.

இப்பயணம் குறித்து கடலுணவு விற்பனை செய்யும் பெண்கள் தெரிவிக்கையில்,

இவ்வீதி, பயணம் இல்லாததால் தினமும் வாகனத்துக்கு 50 ரூபாவிற்கு மேல் கூடுதலாக வாடகை கொடுத்தே வியா பாரத்துக்கு வருவதாகவும், இப்பாதை திருத்தப்பட்டால் மாதாந்தம் 2000 ரூபா வரை மீதப்படுத்த முடியுமென கவலையுடன் தெரிவித்தனர். (150)

# சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை சாவல்கட்டு அருள்வளர் கெங்காதேவி அம்மன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரை 10 தினங்கள் நடைபெறும். இத்திருவிழாக்காலங்களில் மாலை 7.00 மணி முதல் 8.00 மணிவரை சிறப்பு சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றது.

இச்சொற்பொழிவினை சைவத தமிழ் பண்பாட்டுக்கழகப் பணிப்பாளரும், ஆசிரியருமான வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் நிகழ்த்தி வருகின்றார். சொற்பொழிவின் நிறைவுநாளன்று சமய அறிவுப் போட்டி நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெறவுள்ளது. (60)

## கும்பாபிஷேகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடி வீதி 2 ஆம் ஒழுங்கை அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய புனராவர்த்தன ஏககுண்டபஷ மகா கும்பாபிஷேக பெருவிழா இன்று முற்பகல் 9.45 மணி முதல் 10.15 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

பிரதிஷ்டா பிரதமகுரு கணேச பாசகர் நிகழ்வுகளை நிறைவேற்றி வைப்பார். (60)

## ஆலய தரிசனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். எப்.எம். 91.1 அலைவரிசையூடாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் மாலை 5.10 மணி முதல் 5.40 மணிவரை நடைபெறும் 'ஆலய தரிசனம்' நிகழ்ச்சி இன்று மாலை இன்பசிட்டி பழவத்தை காளியம்பாள் தேவஸ்தான சிறப்பு தரிசன நிகழ்வாக அமையவுள்ளது. (60)

# 'உடன்பாடான மனப்பாங்குகள்' நூல் வெளியீட்டு விழா

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆசிரியர் பயிலுநர்களின் நற்சிந்தனை தொகுப்பான உடன்பாடான மனப்பாங்குகள் பாகம் - 2 நூல் வெளியீட்டு விழா நாளை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் பல்நோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி க. பேர்ணாட் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வரலாற்று ஆய்வாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான அருணா செல்லத்துரை கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை ஆசிரிய பயிலுநர் செல்வி எஸ்.சயந்தினி நிகழ்த்த வெளியீட்டுரையினை வீ.ரஞ்சினியும், ஆய்வுரையினை இக் கல்லூரியின் பழைய மாணவனும் பிரபல தமிழ் ஆசிரியருமான சி.வரதராஜனும் நிகழ்த்துவர். சிறப்புப் பிரதிகளை வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி. நடராஜ் மற்றும் கரன்ஸ் சென்டர் உரிமையாளர் இ.பாஸ்கரன் ஆகியோர் பெற்றுக்கொள்வர். (160)

# வலி. கிழக்கு பிரதேச சபை அபிவிருத்தி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்குப் பிரதேச அபிவிருத்தி தொடர்பில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலொன்று வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

அண்மையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் அலுவலகத்தில் அப்பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது வலி. கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட பொது மக்களுடைய வீதிகள், மின்சாரம், வீட்டுத்திட்டம், மலசலகூடம், குடிநீர், மயானம், வாழ்வாதாரம் தொடர்பாக கலந்துரையாடி தெரிவுகளை முன்னிலைப்படுத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அச்சுவேலி பிரதேச அமைப்பாளர் எஸ்.பி.எம்.தர்மராஜாவும் உடனிருந்தார்.




இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளராக இருந்து பிரதிப் பொது முகாமையாளராக பதவி உயர்வுபெற்ற கே.ஈ.டி.சுமணஸ்ரீக்கு வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி இலங்கை வங்கிக் கிளைகள் இணைந்து நடத்திய பிரிவுபசார விழாவில் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.தர்மராஜா தலைமையுரை ஆற்றுவதையும், நெல்லியடி முகாமையாளர் எஸ்.சிவனேசன் உரையாற்றுவதையும், நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.அகிலன் விழா நாயகனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், அவர் ஏற்புரை நிகழ்த்துவதையும் காணலாம். (01)

## எரிபொருள் விநியோகம் இல்லை சமுர்த்தி பயனாளிகள் விசனம்

(சாவகச்சேரி)

சமுர்த்தி உதவி பெறும் மின்சார வசதியற்ற குடும்பங்களுக்கான மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை என பயனாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டின் பிற்காலப்பகுதியான ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையான 4 மாத காலத்திற்கான மண்ணெண்ணெய் விநியோக முத்திரைகள் வழங்கப்பட்டுள்ள நிலையிலும், இதுவரை இவர்களுக்கான மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லையென பயன்பெறும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி தாம் சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் வினவியதாகவும், இக்கொடுப்பனவுக்கான அறிவித்தல் இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மண்ணெண்ணெய் விநியோகம் யாழ்.மாவட்டத்தின் அநேகமான பகுதிகளில் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## தலைமைத்துவ பண்பை வளர்ப்பதில் விளையாட்டுக்கள் முதன்மைபெறுகிறது

### - யாழ்.கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்

(அச்சுவேலி)

பாடசாலைகளில் மாணவர்களுக்காக ஒருங்கமைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வரும் இணைபாடச் செயற்பாடுகளின் மூலம் ஆரோக்கியமானதும், துடிப்பானதுமான எதிர்கால சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். இவ்வாறு கட்டியெழுப்பப்படும் எதிர்கால இளம் சமூகம் வினைத்திறனுடையதாகவும், ஆளுமையுடையதாகவும் அமைந்திருக்கும் என யாழ். கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணகிரிநாதன் தெரிவித்துள்ளார்

அண்மையில், ஆவரங்கால் புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில். அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விளையாட்டு என்பது வெறும் உடற்பயிற்சி மட்டுமல்ல இது மாணவர்களின் பல்வேறு ஆளுமைத் திறன்களையும், தலைமைத்துவத்தையும் வளர்த்துக் கொள்கின்ற ஓர் உன்னதக் கலையும் கூட. எமது சமுதாயத்துப் பெற்றோர் கள் பலர் இன்று சின்னத்திரைக்கு அடிமையாகி விட்டனர். அவ்வாறு அடிமையானவர்களால் பிள்ளைகளின் நலனைக் கூட சரியாக கவனிக்க முடியவில்லை.

இந்தநிலை மாற்றமடைய வேண்டும் பெற்றோர்களின் முழுக்கண்காணிப்பும் பிள்ளைகளின் மீதே இருக்க வேண்டும்.

நடைமுறை உலகில் நம்மில் பலர் இளம் வயதிலேயே நோயாளிகளாக மாறிவிடுகின்றனர். இதற்குக் காரணம் முறையான உடற்பயிற்சிகளில் கவனம் செலுத்தாமையாகும். தினமும் உடற்பயிச்சி செய்பவர்களும், விளையாட்டில் ஈடுபடுபவர்களும் நீண்ட ஆயுளுடனும், ஆரோக்கியத்துடனும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

விளையாட்டின் மூலம் சாதனைகள் பல படைத்தோர் இன்றும் எம்முன் உதாரண புருசர்களாக இருக்கின்றார்கள்.

உலக நாடுகளை உற்று நோக்குவோமாயின் சர்வதேச ரீதியில் அதிகளவான இரசிகர்களைக் கொண்ட ஓர் உன்னதம் மிக்க துறையாக விளையாட்டுத்துறை இன்று பரிணமித்துக் கொண்டிருக்கின்றது.

விளையாட்டு என்பது வயது வேறுபாடின்றி அனைவருக்கும் பொதுவானது. இதனை எமது மாணவர்கள் இளம் வயதிலிருந்தே முறையாகக் கற்று செயற்படுவார்களாயின் அது அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கும் என்பதில் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை என்றார்.

(03)

## சேதமடைந்த குழாய்க்கிணறுகளை திருத்தித்தருமாறு மக்கள் கோரிக்கை

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இதுவரைகாலமும் குழாய்க் கிணறுகள் திருத்தப்படாமையினால் சுமார் 35 இற்கும் மேற்பட்ட குடிநீர்க்குழாய் கிணறுகள் மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில் இருந்து வருகின்றன.

குறிப்பாக, மல்லாவி நகரை அண்டிய பகுதியில் ஆதார வைத்தியசாலையின் நுழைவாயிலில் பலராலும் பயன்படுத்தப்பட்டுவந்த குழாய்க் கிணறு தற்போது பாவனைக்கு உதவாத நிலையில் இருப்பதனால் பாதிப்படைந்துவரும் வர்த்தகர்கள், நோயாளர்கள் இதனைப் பயன்படுத்த முடியாது அவதிப்படுகின்றனர்.

அத்துடன், அனிஞ்சியனகுளம் பாடசாலைக்கு அருகாமையிலும், யோகபுரம் மகா வித்தியாலயப் பகுதியிலும், அனிஞ்சியன்குள செபஸ்தியார் கோயிலடி, பாரதிநகர் யோகபுரம் மத்தி, துணுக்காய் போன்ற பகுதிகளில் மக்கள் பயன்படுத்தும் குழாய்க் கிணறுகள் 3 வருடங்களுக்கு மேல் செயலிழந்து காணப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த குடும்பங்களுக்கு கடந்த 1995 ஆம் ஆண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் இக்குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்ட நிலையில், பின்னர் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்துள்ள இக்குழாய்க் கிணறுகள் திருத்தப்பட்டால் பல மக்கள் குடி நீரைப்பெற இலகுவாக இருக்கும் என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(140)

### கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சு செயலரின் ஆலோசனைப்படி 'சியபத்வில' கலாசார நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பொலிஸாரினால் நடத்தப்படவுள்ளது.

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்.செயலக சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்.பிரதேச செயலக சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.புனித அடைக்கல மாதா ஆலய ஜெரோ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் வி.சக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், சிறப்பு விருந்தினராக யாழ்.பிரதேச செயலக கணக்காளர் திருமதி சுரேஜினி சந்திரசேகரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கூட்டதில் புதிய உறுப்பினர் தெரிவும், அங்கத்துவ அட்டை பெறாதவர்களுக்கு அட்டை வழங்கலும் இடம்பெறும் என சங்க செயலர் அறிவித்துள்ளார்.

## திருக்குறளை உலகிற்கு தந்த திருவள்ளுவருக்கு விழா

ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்னர் ஐயன் திருவள்ளுவர் தந்த அறநூல் என்றும் நிலைத்திருக்கக்கூடிய நற்சிந்தனைகளைக் கொண்டதாகும். தமிழர் தம் சிறப்புக்களில் வள்ளுவம், சிலம்பு, தொல்காப்பியம், ஆகியவை முக்கியமானவையாகும்.

திருக்குறள் முப்பாலில் முழு உலகத்திற்கும் அறம் கூறியது. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் அமைத்த வள்ளுவன் ஏன் வீடுபேறு பற்றி பாடவில்லை, அறம், பொருள் இன்பத்தை நியதிப்படி அனுபவிப்பவன் இறையடி அடைந்துவிடுவான் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

அறம், பொருள், இன்பம் என்னும் ஒழுங்கில் பொருளை இடையில் வைத்தான். பொருளை நியதிப்படி சேர்த்து அறவழி நடப்பவன் இன்பத்தை அடைவான் என்பதும், பொருள் இருபக்கத்திற்கும் அறத்திற்கும், இன்பத்திற்கும் அவசியமானது எனவும் நயமாக காட்டியிருக்கிறார்.


திருக்குறளின் சிறப்புகளில் மற்றொன்று அதிகார முறை வைப்பாகும். இல்வாழ்க்கை எனக் குறிப்பிட்ட வள்ளுவம், இல்லறத்தை சிறப்பாகக் கொண்டு செல்வதற்கு மனைவியின் பண்பும், கடமையும். நல்மக்கள் அனைவரிடமும் அன்பாய் இருத்தல், வீடு தேடி வரும் விருந்தினரை உபசரித்தல், இனிய சொற்களைச் சொல்லுதல், பிறர் செய்த நன்மையை, உதவியை மறவாமல் வாழ்தல், அனைவரையும் சமமாகக் கருதும் மனச் செம்மை, மனம், மொழி, மெய் ஆகியவற்றை தீய வழியில் செல்லாமல் அடக்கி ஆளுதல் என அடுத்தடுத்து அடுக்கிக் கொண்டே செல்கின்றது. இவை மூலம் சொல்லப்படும் உண்மைகளை அறிந்து கொண்டு நடந்தால் வாழ்வின் பயன், வாழ்வின் நோக்கம் நிறைவு பெற்றுவிடும்.

இன்றைய இளம் சந்ததியினரின் நெறிநின்ற வாழ்விற்கு திருக்குறளை அறிந்துகொள்வது அவசியமாகும். இந்த வேகமான உலகில், திருக்குறள் முழுவதையும் கற்றல் என்பது முடியுமா? என்னும் கேள்வி நியாயமானது. ஆனால் வள்ளுவர் பற்றிய உரைகளைக் கேட்பதன் மூலம் திருவள்ளுவத்தை அனுபவிக்க முடியும். விழாக்கள் இந்த நோக்கம் கொண்டவைதான். இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள திருவள்ளுவர் விழா இளைஞர்களுக்கு திருக்குறளை கொண்டு செல்லும் நோக்கத்தில் நடைபெறவுள்ளது.

"பன்முக நோக்கில் வள்ளுவம்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கம் அரசியல், நட்பு, அன்பு, இல்லறம் என்னும் விடயங்களை ஆராயவும், இல்லறச் சிறப்பு, துறவறமேன்மை, ஊழின் வழி பற்றித் தெரிந்து கொள்வதற்கும், பட்டிமன்றமும் உதவும். முழுமையாக இருந்து படிக்க முடியாவிடினும் கேட்பதன் மூலம் அறிந்து கொள்ளமுடியும்.

"வள்ளுவன் தன்னை உலகினுக் ஈய்ந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்பது பாரதியின் குரல். நோன்பு என்பதனை விரதம் என்பார்கள் வடமொழியார். குறிப்பிட்ட சில நாட்களுக்கு அல்லது விரும்புவதைப் பெறும் வரையில் இவ்வாறு இருப்பேன் என்பது விரதமாகும். ஆனால் சால்பு என்பது என்றும் நின்று நிலவி, இயல்பாகவே அமைந்திருக்கின்ற ஓர் உயர்ந்த பண்பைச் சுட்டிக் காட்டுவதாகும். இதிலிருந்து நோன்பை விட சால்பு உயர்ந்தது என்று வற்புறுத்துவதாகத் தெரிகிறது. உயிர்களைக் கொல்லாதிருப்பதை விடத் தீமைகளைச் சொல்லாதிருப்பது தான் உயர்வு என்பது வள்ளுவர் கருத்து என விளங்குகிறது.

கொல்லாமையும், சொல்லாமையும் நல்லதைச் சார்ந்தது என்று கூறும் குறள், வேறு எதனையோ நல்லது என்று கூறுவது போலப்படுகிறதல்லவா. பிற உயிர்கள் வாழ்தலுக்கு உதவுவதும், பிறர் நன்மைகளைச் சொல்வதும் நல்லது என்பது கருத்து.



ஒரு குறளின் உட்பொருள் இவ்வாறு அமையின் 1330 குறளும் எத்தகைய புதையலாக அமையும் என்பதனைக் கூறவும் வேண்டுமா?

சொல்லின் செல்வர்
**இரா.செல்வவடிவேல்**
*பொதுச் செயலாளர்*
*யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்.*

சினத்தை விட்டவன் நாளும் துன்பப்படுவதில்லை. பேராசையை விட்டவன் பேரின்பம் அடைவான். - *சிவானந்தர்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.thinamurasu.net**

## இனம் பார்த்து மனிதநேயம் இல்லை

வரும் 3 ஆம் திகதி தொடங்கும் ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் சேர்த்துக்கொள்ளப்படக் கூடாது. அவர்கள் விளையாடினால் சென்னையில் போட்டிகளை நடத்த விடமாட்டோம் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இந்திய மத்திய அரசுக்குக் கடித மூலம் தெரிவித்துள்ளார்.

இதை தமிழகத்திலுள்ள பல அமைப்புகளும் ஆதரித்திருக்கின்றன. நம் மத்தியிலும் பலர் இதை நமக்கான ஆதரவு நடவடிக்கையாகவும், தமிழ்நாட்டில் சிங்கள எதிர்ப்புப் பெருகுவதன் மூலம் நமக்கான தீர்வு வாய்ப்புப் பிரகாசமாகி வருவதாகப் புளகாங்கிதப்பட்டுக் கொள்வதையும் ஊடகங்களில் எழுதுவதையும் காணமுடிகிறது.

இலங்கைக்கு வெளியே உள்ள தமிழர்கள், போரில் நாம் இழந்தவைக்குப் பழிவாங்கும் உணர்வுடன், சிங்கள எதிர்ப்பையும் பகையையும் வளர்த்து மீண்டும் வேறு வழியில் மோதிப் பார்த்து விடலாம் என்று முயல்வதையும், இலங்கையரசைப் பணியவைத்து மண்டியிடச் செய்து நமக்கான தீர்வைப் பெறுவதே தமிழ்ப் பெருமிதத்தை மீட்கும் வழி என்று ஏதேதோ வகைகளில் தொடர்ந்து மோதுவதில் திருப்திப்பட்டுக் கொண்டிருப்பதையும் நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆனால், இங்குள்ள தமிழ்மக்கள், இங்குள்ள களநிலைமைகளைத் தெரிந்திருப்பவர்கள் இந்தப் புளகாங்கிதங்களுக்கு எடுபட்டு நம் வாழ்க்கையை நாசமாக்கிக்கொள்ள ஒத்துழைப்பதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.

விசித்திரம் என்னவென்றால், புலிகள் காலத்திலேயே இந்த எதிர்ப்பையும் பகைவெறுப்பையும் தூபமிட்டு உசாரேற்றிக் கொண்டிருந்தவர்களே இப்போதும் அதேவித பாணிகளை மாற்றிக்கொள்ளாமல், வெளித்தமிழர்களின் இனப்பகை வளர்ப்புப் போராட்டங்களுக்கும் உசாரேற்றி இங்கிருந்துகொண்டே எழுதிக் கொண்டிருப்பதுதான்! எனில், இத்தனை மக்களின் அழிவிலும் நம் சமூகத்தின் சிதைவிலும் இவர்கள் கற்றுக்கொண்ட பாடம் தான் என்ன?

புலம்பெயர் தமிழர்களினதோ, தமிழ்நாட்டுத் தமிழர்களினதோ அல்லது தமிழக மாணவர்களினதோ அன்பிற்கும் உணர்விற்கும் அக்கறையினால் காட்டப்படுகின்ற ஆதரவிற்கும் நாம் தலைவணங்கலாம். ஆனால், 'இலங்கைத் தமிழருக்கு தனி ஈழம் வேண்டும்', 'ராஜபக்சவை தூக்கிலிட வேண்டும்', 'தமிழர் மீதான படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும்' என்றெல்லாம் கோசங்களிட்டு இந்தக்காலத்திலும் போராடிக் கொண்டிருப்பதற்கு நாம் எப்படி மகிழ முடியும்?

புலிகள் காலத்தை விடவா இன்னுமொரு வலுவான எதிர்ப்புப் போராட்டத்தை இப்போது நடத்தி வென்றுவிட முடியும் என்று நாம் நம்புகிறோம்? புலிகள் போராடிய காலத்து அதே கோசங்களை வைத்துக்கொண்டே, சர்வதேச ஆதரவு நமக்குத் திரும்பி வருகிறது என்று ஏன் திரும்பத் திரும்ப ஏமாற்றுவதிலும் ஏமாறுவதிலும் விருப்பமாயிருக்கிறோம்?

சிங்களத் தரப்பை மன்னிக்கவோ அந்த மக்களை இந்த நாட்டில் சேர்ந்தொன்றாய் வாழும் சகஜீவிகளாய் ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டும் பழியுணர்ச்சியுமே நம் மனங்களை இன்னும் ஆள்கிறது என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். என்னதான் அரச எதிர்ப்பு என்று நாம் வெளியே புரட்சிகரமாகச் சொல்லிக்கொண்டாலும், பகைமறப்பும் நல்லிணக்கமும் அதன் மூலமே தீர்வுக்கு வாழ்வுக்கு வழிகாணும் எத்தனமும் நமக்குள் உருவாக விடாமல் தடுத்துக்கொண்டிருப்பது இனத்துவப் பகையுணர்ச்சியும் பழிதீர்க்கும் மனோபாவமும்தான் என்பது ஆறஅமர யோசித்தால் விளங்கும்.

உண்மையான மனிதநேயம், சக மனித உயிரை மதித்தல் என்பதெல்லாம் இனத்துவரீதியான சிந்தனைகளோடு வருவதல்ல. நாம் இன்னும் இனத்துவரீதியாகவே எங்கள் எண்ணங்களையும் ஆய்வுகளையும் வைத்துக்கொண்டு, மனிதாபிமானமும் முற்போக்குமான துயருக்குத் துடிப்பது போல் காட்டிக்கொண்டிருக்கும் சுயமுரணே எங்களைத் தொடர்ந்து வீழ்த்தியபடி இருக்கிறது.

- *ஆசிரியர்*

# பௌத்த மக்களுக்கான நன்றியை முஸ்லிம்கள் மறக்கக்கூடாது

## கூறுகிறது ஹெலஉறுமய

(கொழும்பு)

சிங்கள பௌத்த மக்களுக்கான நன்றியை மறக்க வேண்டாம் என முஸ்லிம் சகோதரர்களிடம் கோரிக்கை விடுப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களுக்கு நடப்பதாக கூறும் பொய்யான இடையூறுகளை கண்டிப்பதற்காக மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தலைமையிலான முஸ்லிம் ஒத்துழைப்புக்கான அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கடையடைப்புக்கு பெருபான்மையான முஸ்லிம் மக்கள் ஆதரவு வழங்கவில்லை என்பது தெரிகிறது.

முஸ்லிம் அடிப்படைவாதியும் இனவாதியுமான முஜிபூர் ரஹ்மானின் கோரிக்கைக்கு அவருடன், கைகோர்த்து கொண்டவர்கள், கிழக்கில் முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கு அடிப்பணிந்த சில நகரங்களில் உள்ள முஸ்லிம்கள் மாத்திரமே. காத்தான்குடி, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கிண்ணியா, மூதூர் ஆகிய பிரதேசங்களில் உள்ள முஸ்லிம்கள் கடைகளை அடைத்து விட்டு, கடையடைப்புக்கு ஆதரவு வழங்கியுள்ளதாக அறிய முடிகிறது.

கொழும்பு மாளிகாவத்தையில் இருந்து கொண்டு சிங்கள விரோத, பௌத்த விரோத கடையடைப்புக்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த முஸ்லிம் அடிப்படைவாத குழுக்களும், அவர்களின் ஆதரவுடன் இயங்கும் அரசியல் குழுக்களுமே ஆதரவு வழங்கியுள்ளனர்.

எவ்வித அடிப்படையுமில்லாத குற்றச்சாட்டுகளை முன் வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்தக் கடையடைப்பு போராட்டமானது முஸ்லிம் மக்கள் மத்தியில் தம்மை முஸ்லிம் நேசர்களாகவும் வீரர்களாகக் காட்டிக் கொள்வதற்காகவுமே முன்னெடுககப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடானது பௌத்த சிங்கள விரோதமாக மாறி வருகிறது.

தென்கிழக்கு பிரதேசம் முஸ்லிம் அடிப்படைவாதத்திற்குள் மூழ்கி வருகின்றது என்பதை ஜாதிக ஹெல உறுமய தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வந்துள்ளது.

இந்தப் பிரதேசத்தை அடிப்படையாக கொண்டு முஸ்லிம் தாயகக் கோட்பாடு எழுந்து வருகிறது. விடுதலைப்புலிகள் வடக்கிலும், கிழக்கிலும் இருந்து முஸ்லிம் மக்களை விரட்டிய போதும் கொலை செய்த போதும் ஹர்த்தால்களை நடத்த ஆசாத்சாலி, முஜிபூர் ரஹ்மான் போன்ற காட்போட் வீரர்கள், அப்போது எங்கிருந்தனர் என் பதை சிங்கள மக்கள் அல்ல முஸ்லிம் மக்கள் அவர்களிடம் கேட்கவேண்டும்.

ரவூப் ஹக்கீம், பிரபாகரனுடன் உடன்படிக்கையை செய்து கொண்டு முஸ்லிம்களை காட்டிக் கொடுத்த போது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், முஸ்லிம்களின் உரிமைகள் குறித்து பேசவும் இந்த காட்போர்ட் வீரர்கள் முன்வந்தார்களா?.

மணிராசகுளம் முஸ்லிம் கிராமத்தை விடுதலைப்புலிகள் கைப்பற்றிய போது, ஹக்கீம், ஆசாத் சாலி, ரஹ்மான் போன்றவர்கள் எங்கிருந்தனர்.

அத்துடன், கிழக்கு மாகாணத்தை 2008 ஆம் ஆண்டு ராஜபக்ஷ அரசாங்கம், மீட்டபோது, அரசாங்கத்தை கவிழ்க்க ஹக்கீம் உள்ளிட்ட முஸ்லிம் அடிப்படைவாதிகள் மேற்கொண்ட முயற்சிகளை தேசம் ஒருபோதும் மறக்காது என்பதை முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கு கூறிவைக்க விரும்புகிறோம் எனவும் வர்ணசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத மின் பாவனை; பெருமளவில் தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 121 பேருக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையின்போது 5,432,511.78 ரூபா வசூலிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மின்சார சபையின் பொறியியலாளர் சங்கரப்பிள்ளை ஞானகணேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து நேற்று முன்தினம் வரையான காலப் பகுதியில் மின்சார சபை மேற்கொண்ட சோதனையின் போது மீற்றரில் திருத்தங்களை மேற்கொண்டவர்கள் மீதும் மின்சாரக் கம்பிகளில் வயர் கொழுவி சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்கள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள 5 நீதிமன்றங்களிலும் இவர்களை ஆஜர்படுத்தியபோது தண்டம் விதிக்கப்பட்ட நிலையில், மேற்படி தொகை வசூலிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஜனவரி மாதம் புலோலி, கொற்றாவத்தை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, அல்வாய், பருத்தித்துறை; கரவெட்டி, பொலிகண்டி, கற்கோவளம், தும்பளை, குருநகர், கொழும்புத்துறை போன்ற பிரதேசங்களில் மீற்றரில் திருத்தங்களை மேற்கொண்டு மின்சாரம் பெற்ற 29 பேருக்கு 1,573,038 ரூபா தண்டமும் மின்சாரக் கம்பிகளில் வயர் கொழுவி சட்டவிரோத மின்சாரம் பெற்ற 24 பேருக்கு 2,419,10 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டன.

பெப்ரவரி மாதம் குருநகர், திருநெல்வேலி, உடுவில், கொக்குவில், இணுவில், மானிப்பாய், ஊர்காவற்றுறை, கரவெட்டி, யாழ்ப்பாணம், அச்சுவேலி, வேலணை, சுன்னாகம், சங்கானை, நீர்வேலி, தெல்லிப்பழை, புத்தூர், மல்லாகம், கற்கோவளம் போன்ற பிரதேசங்களில் மீற்றரில் திருத்தங்களை மேற்கொண்டு மின்சாரம் பெற்ற 27 பேருக்கு 2,051,906 ரூபா தண்டமும், மின்சாரக் கம்பிகளில் வயர் கொழுவி மின்சாரம் பெற்ற 12 பேருக்கு 2,243,148 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டன.

மார்ச் மாதம் அல்வாய், பருத்தித்துறை, அளவெட்டி, சுன்னாகம், ஏழாலை, கரவெட்டி, கந்தர்மடம், யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, சங்கானை, சண்டிலிப்பாய், குப்பிளான், வட்டுக்கோட்டை, சுழிபுரம், தெல்லிப்பழை ஆகிய பகுதிகளில் மீற்றரில் திருத்தங்களை மேற்கொண்டு மின்சாரம் பெற்ற 15 பேருக்கு 1,240,748 ரூபா தண்டமும் மின்சாரக் கம்பிகளில் வயர் கொழுவி மின்சாரம் பெற்ற 14 பேருக்கு 1,336,66 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில், கடந்த 3 மாதங்களில் மொத்தமாக 121 பேரிடமிருந்து 5,432,511.78ரூபா வசூலிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (25)

# பொருட்களின் விலை, திகதியை அவதானிக்குமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழில் காலாவதியான பொருட்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலையை விடவும் அதிகமாக பொருட்களை விற்பனை செய்வது அதிகரித்து வருவதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி என். சிவசீலன் தெரிவித்தார்.

யாழ். மற்றும் மல்லாகம் நீதவான் நீதிமன்றுக்குட்பட்ட பகுதிகளில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் பரிசோதனை மேற்கொண்ட போது காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 20 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அவர்களுக்கு எதிராக யாழ். மற்றும் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 20 வர்த்தகர்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அந்த வகையில், மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய 19 வர்த்தகர்களுக்கு 50,000 ரூபா அபராதமும் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்திய ஒரு வர்த்தகருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் அறவிடப்பட்டதாக அவர் கூறினார்.

இதேவேளை, வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளதால் நுகர்வோர் பொருட்களின் தரத்தினையும் பொதியிடப்பட்ட திகதி மற்றும் முடிவுத் திகதி என்பவற்றினை பரிசோதனை செய்து பெற்றுக் கொள்ளுமாறு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். (25)

# அம்புலிமாமா அரசியல்

**கோ.றுஷாங்கன்**

70, 80களில் யாழ்ப்பாணத்துச் சிறுவர்கள் அதிகம் விரும்பிப் படிக்கும் சஞ்சிகையாக அம்புலி மாமா இருந்தது. ரத்னபாலா, கோகுலம் போன்ற இந்திய சஞ்சிகைகளும் அந்தக் காலத்தில் சிறுவர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமானவையாக இருந்தன. இந்தச் சஞ்சிகைகள் எல்லாம் இப்போது சிறுவர் மத்தியில் அதிகம் பிரபலமாக வாசிக்கப்படுவதாகத் தெரியவில்லை. ரத்னபாலா நின்றுபோய்விட்டதாகத் தகவல். கோகுலம் இப்போதும் சில புத்தகக்கடைகளில் இருப்பதைக் கண்டதுண்டு. உள்ளூர் பத்திரிகையொன்றில் இப்போது இந்த அம்புலிமாமாக் கதைகளைப் பார்க்கக் கிடைக்கிறது.

எல்லோரும் பொதுவாகக் குற்றஞ் சாட்டுவதுபோல், இதுபோன்ற சிறுவர் சஞ்சிகைகளின் இடத்தை இப்போது சினிமாவும், தொலைக்காட்சியும் பிடித்துவிட்டதோ தெரியவில்லை.

அம்புலிமாமாவில் பொதுவாக புராண இதிகாசப் பாத்திரங்கள், அரச பரம்பரைக் கதைகள் போன்றவற்றுடன், கடந்தகால கிராமப்புறப் பாத்திரங்களின் கற்பனைக் கதைகளும் வெளிவருவது வழமை. இந்தக் கதைகளில், அதிசயங்கள், அற்புதங்கள் அதிகம் நிகழ்வதுடன், கற்பனா ரீதியான கனவுலக மாற்றங்களும் நடைபெறுவதாகக் காட்டப்படும்.

சிறுவர் கதை உலகுக்கு இது போன்ற கற்பனா தேவதைக் கதாபாத்திர அணுகுமுறை பொதுவாக உலக அளவில் காணப்படும் ஒன்றுதான் (ரத்னபாலா, கோகுலம் போன்ற சஞ்சிகைகளில், இந்த அணுகுமுறையைவிட அதிகம் அறிவியல் சார்ந்த விடயங்கள் அதிகம் பேசப்பட்டன என்பதையும் மறுக்க முடியாது).

ஆனால், இன்றைய தமிழர் அரசியல், குறிப்பாக தமிழ்நாட்டுத் தமிழ் அரசியலைப் பார்க்கும்போது ஏனோ கடந்த காலத்தில் வெளியான இந்த அம்புலிமாமா கதைகளே நினைவுக்கு வருகின்றன. அம்புலிமாமாத்தனமான சிந்தனைகளுடன், சினிமா கனவுலக மாயையும் கலந்த ஒன்றாக இது மாறிவிட்டிருப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது.

தந்தை பெரியாரின் அறிவியல் சிந்தனைகள், காமராஜர், அறிஞர் அண்ணாத்துரை போன்றோரின் அரசியல் வழிகாட்டல்களில் வளர்ந்த தமிழக அரசியல்,சினிமாக் காரர்களின் கைகளில் சிக்கி இப்போது ஸ்டன்ட் அரசியலாகியிருக்கிறது.

எம்.ஜி.ஆர். காலத்திலேயே அவருக்குப் போட்டியாக அரசியலில் இருந்து இன்றும் தொடர்ந்து வரும் கதைவசனகர்த்தா கருணாநிதி, எம்.ஜி.ஆருக்குச் சோடியாக நடித்த பெருமையை வைத்தே அவரது அரசியல் வாரிசாகவும் மாறிவிட்ட ஜெயலலிதா போன்றோரின் தொடர் சினிமா அரசியல் பாரம்பரியம், தந்தை பெரியாரின் சிந்தனைகளையும், காமராஜர், அண்ணாத்துரையின் வழிகாட்டல்களையும் எள்ளி நகையாடுகின்றன.

பொதுவாகவே சட்டென்று உணர்ச்சிவசப்படக்கூடிய தன்மை தமிழக மக்களின் பொதுப்பண்பு. ஈழத் தமிழர்கள் தொடர்பில் அவர்களிடம் எப்போதுமே ஒரு உணர்ச்சிகலந்த கரிசனை இருந்து வருகிறது. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி புலிகளாலேயே கொல்லப்பட்டார் என்பதையறிந்தபோது அது சற்று தளர்வடைந்தபோதும், அதையும் கடந்த ஒரு பாசம் ஈழத் தமிழர்கள் மீது அவர்களிடம் எப்போதும் காணப்பட்டு வருகிறது.

சட்டென்று உசுப்பிவிடக்கூடிய இந்த உணர்ச்சியைக் கிளறி, அதை ஒரு பிரவாகமாக பெருக்கெடுத்தோடச் செய்ததில் மேற்குலக நிகழ்ச்சி நிரலில் தயாரிக்கப்பட்டு அவ்வப்போது வெளியாகிவரும் ஈழத்தமிழர் கொலைக் காட்சிகளுடன் கூடிய சனல் 4 பெரு வெற்றி கண்டு வருகிறது. 2012 ஜெனிவா மாநாட்டுக் காலத்தில் தமிழக தெருக்கள் தோறும் விநியோகிக்கப்பட்ட சனல் 4 காணொளி இறுவட்டுக்கள், 2013 ஜெனிவா காலத்தில் புத்தம்புது வெளியீடாக புதுடில்லி பாராளுமன்றத்திலேயே வெள்ளோட்டம் விடப்பட்டது.

இவ்வாறு கிளறிவிடப்பட்ட உணர்ச்சி அலைகளை தத்தம் வாக்குப் பெட்டிகளை நிரப்பிக்கொள்வதற்குச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டுவிட வேண்டும் என்று, கருணாநிதியும், ஜெயலலிதாவும் வழக்கம்போல முண்டியடித்துக்கொண்டார்கள். இவர்களுக்குப் போட்டியாக வைகோவும், தனது தாயாரையே உண்ணாவிரதம் இருக்கச் செய்து சளைக்காமல் போராடி வருகிறார்.

இதற்கிடையில் தமிழக மாணவர்கள் மத்தியிலிருந்து பிரபாகரனே கேட்காத பல ஈழத்தமிழ்க் கோரிக்கைகளுடன், தமிழகம் வந்திருந்த இலங்கை பௌத்த பிக்குகளையும் போட்டுத்தள்ளும் வக்கிரமும் பீறிட்டுக் கிளம்பியிருக்கிறது. தமிழீழத்துக்கான ஓட்டப் பந்தயத்தை ஓடி முடிக்கவேண்டியவர்கள் தாமே என்பதுபோல் இந்தத் தமிழகப் போராட்டங்களும், அரசியல் ஸ்டன்ட்களும் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றன.

ஆனால், தமிழக அரசியலின் இந்த வங்குரோத்துத்தனத்தைச் சரியாக இனங்கண்டுகொண்ட தேசிய ரீதியான பிரதான இந்தியக்கட்சிகள் பலவும் இந்தியாவின் தேசிய நலன்களை மையப்படுத்திய ஆளும் காங்கிரஸ் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் விதமான முடிவுகளையே எடுத்திருப்பதை இந்திய நாடாளுமன்றத்தில் அவற்றின் செயற்பாடுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

தனித்தமிழீழம் அமைக்கப்படவேண்டும், மகிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவிக்கவேண்டும் என்பது போன்ற தமிழக அரசியல் கோஷங்களை பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா தெளிவாக நிராகரித்துவிட்டது. அதுமட்டுமன்றி, இலங்கை தொடர்பான இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்படவேண்டும் என்ற தமிழக கட்சிகளின் கோரிக்கையை ஏனைய அனைத்துக் கட்சிகளும் நிராகரித்துவிட்டன.

நட்பு நாடான இலங்கைக்கு எதிராக அத்தகைய தீர்மானமெதையும் கொண்டுவர முடியாது என்றும், இலங்கை அரசாங்கத்துடன் பகைத்துக்கொண்டு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்றும் எதிர்க்கட்சிகள் தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளன.

தேசம் என்று வரும்போது, கட்சி அரசியல் போட்டாபோட்டிகளுக்கு அப்பால், தேசிய நலன்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கும் பொறுப்பு வாய்ந்த அரசியல் பாரம்பரியம் இந்தியாவில் இருப்பதை, அனைத்து எதிர்க்கட்சிகளும் நிரூபித்துள்ளன. வெளியுறவுக் கொள்கை கட்சி அரசியல் போட்டா போட்டிகளுக்கு அப்பாற்பட்டது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதே வேளையில், இலங்கை விவகாரத்தை, குறிப்பாக போர்க் குற்றங்கள் என்ற விடயத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்து, இந்த நிலைமைகள் தொடர்பான புரிதல் அவருக்கும் இருப்பதை வெளிக்காட்டியுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நடைபெற்ற கூட்டமொன்றில் இதைக் கூறியிருக்கும் அவர், இந்தியாவுடனான நல்லுறவு தொடர்ந்தும் நீடிக்கும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

> “தமிழீழத்துக்கான ஓட்டப் பந்தயத்தை ஓடி முடிக்கவேண்டியவர்கள் தாமே என்பதுபோல் தமிழகப் போராட்டங்களும், அரசியல் ஸ்டன்ட்களும் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றன. ஆனால், தமிழக அரசியலின் இந்த வங்குரோத்துத்தனத்தைச் சரியாக இனங் கண்டுகொண்ட தேசிய ரீதியான பிரதான இந்தியக் கட்சிகள் பலவும் இந்தியாவின் தேசிய நலன்களை மையப்படுத்திய ஆளும் காங்கிரஸ் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் விதமான முடிவுகளையே எடுத்திருப்பதை இந்திய நாடாளுமன்றத்தில் அவை உறுதிப்படுத்தியிருக்கின்றன.”

பாலச்சந்திரனின் படங்கள் மூலம் கிளறிவிடப்பட்ட உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, தமிழகம் தழுவிய அளவில் மேற்கொள்ளப்பட்டுவரும் இலங்கைக்கு எதிரான போராட்டங்கள், இவற்றின் காரணமாக ஜெனீவா தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவாக வாக்களித்தமை போன்றவற்றால் இலங்கையின் பெரும்பான்மைச் சிங்கள அரசியல் வட்டாரங்களில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நிலைப்பாட்டிலிருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னைத் தூரப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

அலரி மாளிகையில் சுதந்திரக்கட்சிப் பிரமுகர்களிடையே கட்சியின் பாரம்பரியம் பற்றி விளக்கும்போது, கட்சியின் ஸ்தாபகரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயகா பற்றி அவர் அதிகம் சிலாகித்துப் பேசியுள்ளார். பிரித்தானிய காலனியாதிக்கத்துக்குப் பிந்திய சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றில், சிங்கள மக்கள் மத்தியில் பொதுவாகக் காணப்படும் பாரம்பரியமான இந்திய எதிர்ப்புணர்வைப் புறந்தள்ளி, இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவை அனுசரித்துப்போகும் வெளியுறவுக்கொள்கையைக் கடைப்பிடித்த முக்கியமான அரசியல் தலைவராக பண்டாரநாயகா இருந்தார் என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயம்.

ஆக, இம்முறை ஜெனீவா மாநாட்டையொட்டி பாலச்சந்திரனின் ஒளிப்படங்கள் வெளியாகி, சனல் 4 காணொளி புதுடில்லி பாராளுமன்றத்திலே வெளியிடப்பட்டு, தமிழக அரசியல்வாதிகளின் அழுத்தம் இந்திய மத்திய அரசுக்குக் கடுமையாகக் கொடுக்கப்பட்டபோதும், தி.மு.க., அ.தி.மு.க. தவிர்ந்த இந்திய தேசியக் கட்சிகள் அனைத்தும் நிலைமையைப் புரிந்துகொண்டு இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை விடயத்தில் ஒத்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளன.

தமிழக போராட்டங்களாலும், ஜெனீவா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தமையாலும் உணர்ச்சிவசப்படாமல் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் நிலைமையைப் புரிந்துகொண்டவராக, இந்தியாவுடனான உறவு தொடர்ந்தும் நீடிக்கும் என்று அறிவித்துள்ளார்.

ஆனால், தமிழகக் கட்சிகள் இன்னமும் தமது நிலைப்பாட்டைக் கைவிட்டதாகத் தெரியவில்லை. தமிழக மாணவர்களும் ஈழத்தமிழர்களே தூக்கிப் பிடிக்காத கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டங்களைத் தொடர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

குழந்தைகளுக்கான அம்புலிமாமாக் கதைகள் போல் மாறிவிட்ட சில சினிமாப் படங்களும், இத்தகைய சினிமாக் கலாசாரத்தின் வழிவந்த தமிழக அரசியல்வாதிகளும், இந்த மனோநிலைகளிலிருந்து விடுபடுவார்கள் போலத் தெரியவில்லை.

தமிழ்த் தேசியம் பேசும் அரசியல் தலைவர்களும், தமிழகப் போராட்டங்கள் இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு ஏற்படுத்திவிடக்கூடிய விபரீதங்கள் பற்றியெல்லாம் கவலைப்படாமல் அவர்களுக்கு நன்றி கூறி தமது அரசியலைக் கொண்டு நடத்துகிறார்கள்.

இவற்றையெல்லாம் பார்க்கும்பொது, “எங்களை வைத்து காமடி கீமடி ஏதும் பண்ணேல்லையே?“ என்று வடிவேல் பாணியிலான கேள்வி இலங்கைவாழ் தமிழர்களுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிறது.



# இலங்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டம் மத்திய அரசின் நிலைப்பாடு என்ன?

## கேட்கிறது ஜே.வி.பி.



(கொழும்பு)

தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக இடம்பெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிபபடுத்தப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியாவுக்கு செல்லும் இலங்கையர்களின் பாதுகாப்புத் தொடர்பிலும் இலங்கை அரசாங்கம் தெளிவான விளக்கததை வழங்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இந்தியா செல்கின்றவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது இந்திய மத்தய அரசாங்கத்தின் பொறுப்பு. அது தமிழக முதல்வரின் பொறுப்பு என்று கூற முடியாது.

தொடர்சியாகத் தமிழகத்தில் இலங்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதுடன், இலங்கையர்களுக்கு எதிரான தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், இந்த விடயத்தில் இந்திய மத்திய அரசாங்கத்தின நிலைப்பாடு என்ன? என்பது தெளிவு படுத்தப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

சவால்களை வெற்றிகொள்ள

# வெளிநாடு வாழ் இலங்கையரின் ஆதரவைக் கோரும் ஜனாதிபதி

(கொழும்பு)

நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களை வெற்றிகொள்ள வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் வாழ்கின்ற இலங்கையர்கள் சிலருடன் அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இந்தக் கருத்தினைக் கூறினார்.

30 வருடகால யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்து அபிவிருத்திப் பாதையில் நாட்டை இட்டுச்செல்கின்றமை தொடர்பில் வெளிநாட்டில் வாழ்கின்ற இலங்கையர்கள் இதன்போது ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

இலங்கைக்கு எதிரான சர்வதேச சக்திகளை எதிர்கொள்வதற்காக, வெளிநாடுகளிலுள்ள தொழில் வர்க்கத்தினரினதும் வெளிநாட்டு குடியுரிமை பெற்றுள்ள இலங்கையர்களினதும் ஆதரவைத் தாம் எதிர்பார்ப்பதாக இதன்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# புத்தரின் பிறப்புக் குறித்து தேரர்களிடையே சர்ச்சை

(கொழும்பு)

கௌதமபுத்தர் இலங்கையில் பிறக்கவில்லை என இரத்மலானை தர்ம ஆய்வு மையத்தின் பணிப்பாளர் நாகொட விபஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார். கௌதம புத்தர் இந்தியாவில் பிறக்கவில்லை எனவும் இலங்கையில் பிறந்ததாகவும் அதற்கான புனித தள சாட்சியங்கள் காணப்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்திருந்தார்.


கௌதமபுத்தர் இந்தியாவில் பிறக்கவில்லை. அதனால் பௌத்த மத வழிபாடுகளுக்காக இந்தியாவிற்கு செல்ல வேண்டியதில்லை எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

உடுவே தம்மாலோக தேரரின் இந்தக் கருத்து குறித்து பகிரங்க விவாதம் நடாத்தத்தயார் என நாகொட விபஸ்ஸி தேரர் குறிப்பிட்டுள்ளார்.

கௌதம புத்தரின் பிறப்புத் தொடர்பில் இவ்வாறான அடிப்படையற்ற கருத்துக்களை வெளியிடுவதனையிட்டு உடுவே தம்மாலோகதேரர் வெட்கப்பட வேண்டும்.

தமிழ் புலம்பெயர் மக்களின் பிரசாரங்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ உடுவே தம்மா லோக தேரர் சிக்கியிருக்கின்றார் என நாகொட விபஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு ஆபிரிக்க நாடுகளுடன் உறவை வலுப்படுத்தும் இலங்கை



(கொழும்பு)

கிழக்கு மற்றும் தெற்கு ஆபிரிக்க நாடுகளுடன் உறவை விரிவுபடுத்தும் செயற்பாடுகளை இலங்கை மேற்கொண்டு வருகிறது.

இந்த நாடுகளுடனான சிறந்த உறவைத் தக்கவைத்துக் கொள்ளும் பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருவதாக, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சீசெல்ஸ் சென்றுள்ள அவர் அந்த நாட்டின் ஜனாதிபதியை நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இந்து சமுத்திரத்தில் இலங்கை முக்கிய செயற்பாட்டினை வெளிப்படுத்தி வருவதாக சீசெல்ஸ் ஜனாதிபதி தெரிவித்ததாக, அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பேரியல் அஷ்ரப்பிற்கு எதிராகவும் பொதுபலசேனா போர்க்கொடி

(கொழும்பு)

சிங்கப்பூருக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பேரியல் அஷ்ரப்பை பணி நீக்குமாறு பொது பலசேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பேரியல் அஷ்ரப் பௌத்த மதத்திற்கும், சிங்கள இனத்திற்கும் இழிவு ஏற்படும் வகையில் செயற்பட்டு வருவதாக அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட்ட அத்தே ஞானசார தேரர தெரிவித்துள்ளார்.

இலங்கை உயர்ஸ்தானிகர் என்றவகையில் ஆற்றப்பட வேண்டிய கடமைகளையும் பொறுப்புக்களையும் பேரியல் அஷ்ரப் உரிய முறையில் ஆற்றத் தவறியுள்ளார்.

அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகளின் போது 'சிங்கள எங்கள் நாடு' மற்றும் 'எனது தேசம் - எனது இனம்' ஆகிய பாடல்களை ஒளிபரப்புச் செய்ய பேரியல் அஷ்ரப் அனுமதிக்கவில்லை.

சிங்கள- தமிழ் புத்தாண்டை, இலங்கைப் புத்தாண்டு எனப் பெயரிடவும், பொசோன் மற்றும் வெசாக், பௌர்ணமி தினங்களில் பௌத்த கொடிகளை ஏற்றக் கூடாது எனவும் பேரியல் கோரியுள்ளதாக கலபொட்ட அத்தே ஞானசார தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டுக்கு களங்கம் ஏற்படும் வகையில் செயற்படுவோரை வெளிநாட்டு உயர்ஸ்தானிகராக நியமிக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழர்களின் வாழ்க்கை குறித்து நேரடியாக வந்து பாருங்கள்

## இந்திய அதிகாரிகளை அழைக்கும் முரளி



(கொழும்பு)

இலங்கையில் கடந்த காலங்களில் போர்ச்சூழல் இருந்தது. ஆனால், தற்போது தமிழர்கள் இலங்கையில் அமைதியாகவே வாழ்கின்றனர். இதனை இந்திய அதிகாரிகள் இலங்கையில் தமிழர்களாகிய நாங்கள் எப்படி வாழ்கிறோம் என்பதை வந்து பார்க்கவேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீசசாளர் முத்தையா முரளிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த காலத்தில் நடந்ததை மறக்க வேண்டும். தற்போதைய நிலையில் மற்றொரு போர்ச் சூழலை இலங்கைத் தமிழர்கள் விரும்பவில்லை என்று குறிப்பிட்டுள்ள முரளிதரன், ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடும் இலங்கை வீரர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை வருத்தமளிக்கிறது ஏன்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியன் பிரீமியர்லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியின் 6 ஆவது சீசனில், சென்னையில் நடைபெற உள்ள லீக் ஆட்டங்களில் இலங்கை வீரர்கள் விளையாட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கருத்து கூறியுள்ள ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் விளையாடும் முரளிதரன் கடும் ஏமாற்றம் அடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது கிரிக்கெட்டிற்கு வருத்தமான நாள் என்றும் அவர் கூறியுள்ளார். எனினும், இது அரசின் முடிவு என்னும் போது அரசே எங்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியவில்லை என்னும் நிலையில் நாங்கள் எச்சரிக்கையுடன் இருப்பதே நல்லது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து கூறிய முரளிதரன், இலங்கை தமிழராகிய தாம் கடந்த 20 ஆண்டுகளாக இலங்கை அணிக்காக விளையாடியுள்ளதாகவும், ஒரு தமிழனாக இலங்கையில் தமக்கு எந்தவித பிரச்சினையும் ஏற்பட்டதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். தாம் பல்வேறு பிரசசினைகளை சந்தித்த சமயங் களில் இலங்கை அரசும், இலங்கை கிரிக்கெட் சபையும் தமக்கு ஆதரவாகத்தான் செயற்படடன என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் போர்ச்சூழல் இருந்தது. ஆனால் தற்போது தமிழர்கள் இலங்கையில் அமைதியாகவே வாழ்வதாக முரளிதரன் கூறியுள்ளார். எனவே இந்திய அதிகாரிகள் இலங்கையில் தமிழர்களாகிய நாங்கள் எப்படி வாழ்கிறோம் என்பதை வநது பார்க்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த காலத்தில் நடந்ததை மறக்க வேண்டும் என்றும் தற்போதைய நிலையில் மற்றொரு போர்ச்சூழலை தமிழர்கள் விரும்பவில்லை என்றும முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

# 750 இராணுவத்தினர் ஹெயிட்டி விஜயம்

ஐக்கிய நாடுகளின் சமாதானப் படை அணியில் கடமையாற்றுவதற்காக ஒரு தொகுதி இராணுவத்தினர் ஹெயிட்டி செல்லவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இதற்காக இலங்கை இராணுவத்தின் 18 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த 750 பேர் செல்லவுள்ளதாகத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது

# இன காழ்ப்புணர்வை பரப்ப விளையாட்டைப் பயன்படுத்தாதீர்

## தமிழகத்திடம் கோருகிறார் வாசு

(கொழும்பு)

நாட்டிலுள்ள இனங்களிடையே இன காழ்ப்புணர்வை பரப்புவதற்கு விளையாட்டைப் பயன்படுத்த வேண்டாம் என கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையினை தமிழ் நாட்டு அரசாங்கத்திடம் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார விடுத்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிகளில் விளையாட ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ள இலங்கை கிரிக்கெட் வீரர்கள் தமிழ்நாட்டில் விளையாட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா கூறியதையடுத்தே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கிரிக்கெட்டை மக்கள் இன கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை. எனவே, இனங்களிடையே நல்லிணக்கம் ஏற்பட விளையாட்டு குறிப்பாக கிரிக்கெட் நல்ல வாய்ப்பை வழங்குகின்றது என அவர் தெரிவித்தார்.

இதை நாம் தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கு விளக்குவோம் எனக் கூறிய அமைச்சர் இலங்கைக்குள்ளும் அதற்கு வெளியில் உள்ள இனக்குழுக்களிடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தனது கடமையாகும் எனத் தெரிவித்தார்.

# பூநகரி பிரதேச அபிவிருத்தியில் விசேடகவனம் செலுத்த வேண்டும்

(பூநகரி)

பூநகரி பிரதேசம் அனைத்து துறைகளிலும் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். குறிப்பாக பூநகரியின் கல்வித் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்பட வேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற பூநகரிக் கோட்ட பாடசாலைகளுக்கிடையேயான தமிழ்மொழித்தினப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் எமது பிரதேசங்களில் நம்பிக்கைத்தரும் வகையில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாற்றங்களை மேலும் அதிகரித்துச் செல்லவேண்டும். இதற்கு தனிமனித உழைப்புகளுக்கு அப்பால் அனைவரினதும் கூட்டு உழைப்பு அவசியம்.

ஏ - 32 மற்றும் ஏ - 35 பாதைகளின் புனரமைப்புப் பணிகள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. அதன் பணிகள் இவ்வருடத்திற்குள் முடியும் பட்சத்தில் இந்தப் பிரதேசத்தில் இதுவரைகாலமும் நிலவிவந்த மிகப்பெரிய பிரச்சினையான போக்குவரத்துப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

மேலும் இந்தப் பிரதேச கல்வித்துறையின் மேம்பாட்டிற்காக பல அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற கொள்ளப்பட்டும் வருகின்றன.

குறிப்பாக பூநகரி மகா வித்தியாலயம் 110 மில்லியன் ரூபா செலவில் மிகப்பெரியளவில் அமைக்கப்படுவதோடு ஜெயபுரம், ஞானிமடம் உள்ளிட்ட பல பாடசாலைகள் அனைத்து வசதிகளுடனும் அமைக்கப்பட்டும் வருகின்றன. எனவே இந்த பௌதிகவளங்களை பயன்படுத்திக் கொண்டு பெறுபேறுகளில் சாதிக்கவேண்டும். கல்வியில் சமச்சீரான நிலைமையினை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் நாம் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

பூநகரி கோட்டக்கல்விப்பணிபாளர் தர்மரத்தினம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் முருகவேல், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் பூநகரி பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.



# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கண்காட்சியும், விற்பனைச்சந்தையும்

(சாவகச்சேரி)

புத்தாண்டை முன்னிட்டு ஒரே இடத்தில் எல்லாவிதமான பொருட்களையும் மக்கள் பெறும் நோக்கிலான கண்காட்சியும், விற்பனைச்சந்தையும் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் இக்கண்காட்சியும், விற்பனைச் சந்தையும் காலை 9 மணி முதல் மாலை வரை இடம்பெறவுள்ளது. இதனை தென்மராட்சி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு திவிநெகும எழுச்சித் திட்டத்தின் கீழ் இவ்விற்பனைச் சந்தை இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி திட்டப் பிரிவினர் இவ்விற்பனைச் சந்தைக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாண்டின் 4 ஆம் பங்குனித்திங்கள் தினமான 8 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மிக பிரபல்யமான மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு மிக அருகில் இக்கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் இடம்பெறுவதால் இதன் மூலம் ஏராளமானவர்கள் பயன்பெற வாய்ப்பு இருப்பதாகவும், பெருமளவிலான மக்கள் இவ்விற்பனைச் சந்தையில் கலந்து கொள்வாரக்ள் எனவும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (இ)

# வீதிப்புனரமைப்பு இன்மையால் போக்குவரத்து நெருக்கடி

(நட்டாங்கண்டல்)

முல்லை மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நட்டாங்கண்டல் பகுதிக்கான வீதிப் புனரமைப்பு இன்மையால் பேருந்து சேவைகள் பெரும் நெருக்கடிக்குள்ளாகி வருகின்றன.

நட்டாங்கண்டல் தொடக்கம் பாண்டியன்குளம், எஸ்.ஆர். சந்தி வரையும் சுமார் 3 கிலோ மற்றர் தூரம் உள்ள வீதி பாரிய குன்றும் குழியுமாக காட்சி அளிப்பதனால் இதனூடாக விரைவான பயணங்களை மேற்கொள்ளமுடியாமல் மக்கள் சிரமப்படுகின்றனர்.

மீள் குடியமர்வு இடம்பெற்று மூன்றரை வருடங்கள் கடந்தும் வீதிகள் திருத்தும் பணி இதுவரையும் நடைபெறவில்லை. அத்துடன் இப்பகுதியில் நட்டாங்கண்டல் கிராமத்தை அண்டிய 15 கிராமங்களை உள்ளடக்கிய ஒரு மகப்பேற்று மருத்துவமனையுடன், வெளிநோயாளர் பிரிவும் உள்ளது. இவ்வைத்தியசாலைக்குச் செல்வதாயின் பல இடர்களை மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே இந்நிலை மாற வேண்டும். மக்களின் போக்குவரத்துத் தேவையைக் கருத்திற்கொண்டு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இவ்வீதியை புனரமைக்கவேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

# வெள்ளைப் பிள்ளையாருக்கு மகா கும்பாபிஷேகம்

(சிகரம்-ஷர்மிலன்)

யாழ்.திருநெல்வேலி கிழக்கு வெள்ளைப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

வெள்ளைப்பிள்ளையாருக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயில் கோபுரத்திற்கும் நிகழும் கும்பாபிஷேகம் காலை 9.30 மணிமுதல் 10.15 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறும் விசேட பூஜைகளைத் தொடர்ந்து கும்பாபிஷேக மலர் வெளியீடும் நடைபெறவுள்ளது.

# நாடகப் போட்டியில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் புண்ணிய கிராம விழாவையொட்டி அரியாலை ஸ்ரீ துரவடிப்பிள்ளையார் ஆலயத்தில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி முதலாமிடத்தை கொக்குவில் ஸ்ரீ கிருஸ்ணா அறநெறிப் பாடசாலையும், இரண்டாமிடத்தை அரியாலை கிழக்கு ஸ்ரீ துரவடிப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலையும், மூன்றாம் இடத்தை கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வல்லை கணபதி பாலர் பாடசாலை மாணவர்களின் கல்வி சார் மற்றும் கைவினைப் பொருட்களின் ஆக்கக் கண்காட்சி பாடசாலை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை 9.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

# ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆசிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் பங்குனிமாத மலர் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையினை இளைப்பாறிய அதிபர் வ.கணேசமூர்த்தி, மதிப்பீட்டுரையை க.ஆனந்தராசா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# முரசின் இன்றைய பலன்

(29.03.2013 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி மாதம் 16 ஆம் திகதி.
நட்சத்திரம் சித்திரை முற்பகல் 9.25 வரை. திதி துதியை.
பிற்பகல் 01.02 வரை. மரணயோகம்.
இராகுகாலம் 10.43 - 12.13 வரை. சுபநேரம் 6.13 - 07.43 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தொழிலில் குளறுபடி. விரும்பியது நடக்காத ஏமாற்றம். போக்குவரத்தில் கவனம். புது முயற்சிகள் வேண்டாம். பணவரவில் தாமதம். ஓய்வு. |
| ரிஷபம் | எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை. பெற்றோரின் விருப்ப நிறைவேற்றம். எதிர்காலம் குறித்து ஆலோசனை. கடமையுணர்வு. கோரிக்கை நிறைவேறும். |
| மிதுனம் | கவலை, கவனச்சிதறல் ஏற்படலாம். நிதானம் தேவை. அளவான பணவரவு. பாதுகாப்பு கவனம். மனஅமைதி. உறவினர்கள், அனுசரணை. |
| கடகம் | கூடுதல் உழைப்பால் இலாபம். எடுத்த காரியம் கைகூடும். வெளியூர்ப் பயண வாய்ப்பு. கொடுத்த கடன் வரும். குடும்பத்தேவைகள் தீரும். அறப்பணி. |
| சிம்மம் | எதிர்ப்புகள் விலகும். நண்பர், உறவினரால் நன்மை. தொழில் இலக்கு நிறைவேறும். பணவரவில் திருப்தி. குடும்பம் கூடுதல் பாசம். சமூக அந்தஸ்து. |
| கன்னி | தர்மசங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். மனதில் குழப்பம். அயலவருடன் தேவையற்ற பேச்சு கூடாது. வேலைப்பளு. பிணி தொந்தரவு. |
| துலாம் | மகிழ்ச்சியான செய்தி வரும். தொழிலில் மாற்றம். சேமிப்பு அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை. புதிய மூலதனம் கிடைக்கும். சிக்கல் விலகும்.. |
| விருச்சிகம் | தொந்தரவுகள் வரலாம். சிலரது சுயலாபம் எரிச்சல் தரும். அதிக உழைப்பு. சிக்கனம் சிரமம் தவிர்க்கும். அச்ச மனநிலை மாற்ற குடும்பம் அனுசரணை. |
| தனுசு | தவறாக விமர்சித்தவர்களும் அன்பு பாராட்டும் அனுகூல நிலை. பணியில் மகிழ்ச்சி. தொழில் வளர வெளிஆதரவு. தாராள பணவரவு. நன்மதிப்பு. |
| மகரம் | எண்ணத்திலும், செயலிலும் உற்சாகம். பிறர் நலன கருதுவீர்கள். தொழில் முன்னேற்றம். கணவன் மனைவி அன்யோன்யம். தொழிலில் கவனம். |
| கும்பம் | யாரிடமும் கேலி பேச வேண்டாம். அதிருப்தி வரலாம். தொழிலில் சிக்கல் வரும். பிறர் ஆதரவுடன் வெல்வீர்கள். புதிய செலவு வரும். கடன் பெறுவீர்கள். |
| மீனம் | மனதில் சிறு வருத்தம் வந்து விலகும். குடும்பத்தில் வாக்குவாதம் வேண்டாம். தொழில் சுமார். எதிர்பார்த்த பணவரவும் புதிய பணச்செலவு. சிரமங்கள் |

# குடிபோதையால் வந்த வினை கோமாவில் நியூசிலாந்து வீரர்



(வெலிங்ரன்)

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் ஜேசி ரைடர். இடதுகை துடுப்பாட்ட வீரரான ரைடர் சர்ச்சைகளில் சிக்கிக் கொள்வது வாடிக்கை. பல்வேறு முறை ஒழுங்கீனமாக நடந்து கொண்டு நியூசிலாந்து கிரிக்கெட் சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறார். பல்வேறு முறை அவர் குடிபோதையில் ரகளையில் ஈடுபட்டிருக்கிறார்.

ரைடர் உள்ளூர் போட்டிகளில் விளையாடி விட்டு மதுபானசாலையில் சக வீரர்களுடன் இருந்தார். மதுபான சாலையில் ரைடருக்கும் அங்கு இருந்த சிலருக்கும் தகராறு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதில் 4 பேர் சேர்ந்து அவரை சரமாரியாக அடித்து உதைத்தனர். இந்த அடிதடியில் ரைடரின் மண்டை ஓடு உடைந்தது.

இதைத்தொடர்ந்து, கிறிஸ்ட் சேர்ச் நகரில் உள்ள மருத்துவமனையில் ரைடர் அனுமதிக்கப்பட்டார். அவரது உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. அவர் மயக்க நிலையில் கோமாவில் தான் உள்ளார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சம்பவம் பற்றி கேள்விப்பட்டதும் ரைடரின் குடும்பத்தினர் வெலிங்டனில் இருந்து அவரசமாக கிறிஸ்ட் சேர்ச் புறப்பட்டு சென்றனர்.

28 வயதான ரைடர் சர்வதேச போட்டிகளில் விளையாடுவதில் இருந்து ஒதுங்கி இருந்தார். கடைசியாக கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் விளையாடினார். ஆனால் ஐ.பி.எல். போட்டியில் விளையாடுவதை ரைடர் ஆர்வமாக கொண்டு இருந்தார்.

கடந்த சீசனில் அவர் புனே வாரியர்ஸ் அணியில் விளையாடினார். தற்போது நடைபெற இருக்கும் 6ஆவது ஐ.பி.எல். போட்டியில் அவர் டில்லி டேர்டெவில்ஸ் அணிக்கு விளையாட ஒப்பந்தமாகியிருந்தார். அவரை அந்த அணி ரூ.1.37 கோடிக்கு ஏலத்தில் எடுத்து இருந்தது.

# முடிவெடுங்கள் சச்சின்

(கொல்கத்தா)

ஒரு போதும் இனி தன்னால் பழைய மாதிரி விளையாட முடியாது என்று தெரிந்து விட்ட நிலையில் சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெறும் அந்த வலிநிறைந்த முடிவை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கரின் கிரிக்கெட் வாழ்வு முக்கியமான கட்டங்களைக் கடந்து விட்டது. இதனால் அவர் முடிவை விரைவில் எடுக்கவேண்டும்.

வயது என்பது வெறும் எண் அல்ல. கிரிக்கெட் மீது உயிரையே வைத்திருந்தாலும் மற்றவர்களின் முன்னேற்றத்தை சச்சின் தடுக்கக்கூடாது. ராகுல் ராவிட், கும்ளே, கங்குலி போல் இவரும் கிரிக்கெட்டிற்கான சிறந்த தூதுவர்தான்.


கிரிக்கெட்டை விட்டு நகர்ந்து பல்வேறு விதங்களில் பங்களிப்புச் செய்ய முடியும். கிரிக்கெட்டிற்கு வெளியே வாழ்க்கை மிகவும் அழகாக இருக்கிறது.

சச்சின் இந்திய கிரிக்கெட்டிற்கு வழங்கிய பங்களிப்பு அற்புதமானவை, ஈடு இணையற்றவை. ஆனால், அவர் முடிவெடுக்கவேண்டும்.

அவரது வாழ்க்கையில் பிற விடயங்கள் ஆர்வமூட்டினால் கிரிக்கெட்டை விடுவது ஒன்றும் பெரியவிடயமல்ல.

ஓய்வு என்ற வார்த்தையை அவரிடம் பிறர் வலியுறுத்தும் போது அவருக்கு வலி ஏற்படுவதை புரிந்து கொள்ள முடிகிறது ஆனாலும் அவர் முடிவெடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமணம்



(மும்பை)

இந்திய கிரிக்கெட் அணி வீரர் யூசுப் பதான் - ஆப்ரீன் திருமணம் நேற்று முன்தினம் மும்பையில் நடந்தது.

இந்திய அணியின் அதிரடி சகலதுறை வீரர் யூசுப் பதான், இதுவரை 57 ஒருநாள் போட்டிகளில் 810 மற்றும் 22 ருவென்ரி-20 யில் 236 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இவருக்கும் மும்பையைச் சேர்ந்த ஆப்ரினுக்கும், கடந்த ஆண்டு மார்ச் 24இல் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. இவர்களது திருமணம் நேற்று முன்தினம் மும்பையில் பாரம்பரிய முறைப்படி நடந்தது. ஆப்ரீன் பிசியோதெரபிஸ்டாக உள்ளார். இரு குடும்பத்தை சேர்ந்த நெருங்கிய உறவினர்கள் மட்டும் திருமணத்தில் கலந்து கொண்டனர்.

# சுயவிருப்பத்தின் பேரில் அனுப்பப்படும் வீரர்கள்

(கொழும்பு)

சுயவிருப்பத்தின் பேரில் கடிதங்களைப் பெற்று இலங்கை கிரிக்கெட் வீரர்களை ஐ.பி.எல் போட்டிகளுக்கு அனுப்பிவைக்கத் தீர்மானித்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். இலங்கை வீரர்களை ஐ.பி.எல். போட்டிகளில் களமிறக்குவது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடனான கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார். எவ்வாறாயினும், ஏனைய மாநிலங்களில் நடைபெறவுள்ள போட்டிகளில் விளையாடுவதற்கு இலங்கை வீரர்களை அனுப்பிவைக்குமாறு இந்திய கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இதற்கமைய, இலங்கை வீரர்களின் பாதுகாப்பிற்கு இந்திய கிரிக்கெட் சபை உத்தரவாதமளிக்க வேண்டும் எனவும், உத்தரவாதம் கிடைத்தவுடன் வீரர்களின் விருப்பம் குறிப்பிடப்பட்ட கடிதங்களைப் பெற்று அவர்களை இந்தியாவிற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# சிறப்பான தொடக்கம்

(புதுடில்லி)

புஜாரா தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை சிறப்பாக தொடங்கியிருக்கிறார். உண்மையை சொல்லப் போனால் அவர் என்னை விட, சிறப்பான தொடக்கத்தை கண்டுள்ளார் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் ராகுல் ராவிட் தெரவித்துள்ளார்.

புஜார்ராவின் துடுப்பாட்டம் முறைப்படியான ஆட்டத்தைப் பறைசாற்றும் வகையில் இருப்பதாக நான் நினைக்கிறேன். டெஸ்ட் போட்டியில் அவர் விளையாடும் பல ஷொட்கள் மற்றும் அணுகுமுறைகள் நான் பின்பற்றிய வழியைப் போல் உள்ளது. அவரது அடிப்படை ஆட்டம் நன்றாக உள்ளது. அவர் விளையாட்டின் ஏற்ற, இறக்கங்களையும், சோதனை-களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு சமாளிப்பார்.

இதேபோல், தொடர்ந்து சிறப்பாக ஆடினால் அவரது மனதில் எழும் பல கேள்விகளுக்கு விடைகிடைக்கும். அத்துடன் அவர் ஒருநாள் போட்டியிலும்சிறப்பாக ஜொலிப்பார். அதற்கான திறமை அவரிடம் உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜோகோவிச் அதிர்ச்சித் தோல்வி அரையிறுதியில் செரீனா



சோனி ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றில், உலகின் முதல் நிலை வீரர் நோவாக் ஜோகோவிச் (சேர்பியா) அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

நான்காவது சுற்றில் டாமி ஹாசுடன் (ஜேர்மனி) நேற்று முன்தினம் மோதிய ஜோகோவிச் 2,6, 4,6 என்ற நேர் செட்களில் தோற்று வெளியேறினார். மற்றொரு 4ஆவது சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே 6,2, 6,4 என்ற நேர் செட்களில் இத்தாலி வீரர் செப்பியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் சீனாவின் நாலியுடன் நேற்று முன்தினம் மோதிய செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 6,3, 7,6 (7,5) என்ற நேர் செட்களில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றுமொறு காலிறுதியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, இத்தாலியின் சாரா இரானியை சந்தித்தார். இதில் டைபிரேக்கர் வரை நீடித்த முதல் செட்டை 7-5 என ஷரபோவா வென்றார். தொடர்ந்து டைபிரேக்கர் வரை நீடித்த இரண்டாவது செட்டையும் ஷரபோவா 7-5 என தன் வசப்படுத்தியதுடன் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளார்.

# இழைக்கப்படுகிறது அநீதி

இலங்கை வீரர்களை தமது ஆலோசனையின்றி ஐ.பி.எல். போட்டிகளிலிருந்து நீக்கியமை தொடர்பில் ஐ.பி.எல். அணிகளின் உரிமையாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஐ.பி.எல்.ஏற்பாட்டுக்குழு எடுத்த இந்தத் தீர்மானம் மூலம் சென்னை அணிக்குச் சாதகமான தன்மை ஏற்படலாம் என்றும் அணி உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொள்ளும் முன்னர் தமக்கு தெளிவுபடுத்தாமையினால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியன் பிரீமியர் லீக் போட்டிகளில் 13 இலங்கை வீரர்கள் கலந்துகொள்கின்ற போதிலும் அதில் இரண்டு வீரர்கள் மாத்திரமே சென்னை அணியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக ஏனைய 11 வீரர்களுக்கும் சென்னையில் நடைபெறுகின்ற போட்டிகளில் கலந்துகொள்ள முடியாமையினால் அநீதி இழைக்கப்படுவதாக அணி உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# மூடப்பட்டது அரங்கு

2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள ரியோ டி ஜெனைரோ விளையாட்டரங்கு காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கூரை உள்ளிட்ட உட்கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாக விளையாட்டரங்கு மூடப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் கூறியுள்ளனர். குறித்த விளையாட்டரங்கு ஆறு "வருடங்களுக்கு முன்னரே நிர்மாணிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ரியோ டி ஜெனைரோவின் பிரதான கால்பந்தாட்ட விளையாட்டரங்காகவும் இது பயன்படுத்தப்பட்டிருந்தது. இதனிடையே, நகரிலுள்ள மரகானா மைதானம் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளுக்காக புனரமைக்கப்பட்டு வருகின்றது. இரண்டு பாரிய விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்கு தயாராகி வரும் நிலையில், இந்த விளையாட்டரங்கு மூடப்பட்டமை பிரேசிலுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# விருதுக்குப் பரிந்துரை

(கோலாலம்பூர்)

சர்வதேச பட்மின்ரன் சம்மேளனம் சார்பில் ஆண்டுதோறும் சிறந்த வீரர், வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்கள். இதன்படி 2012ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர்களின் பட்டியலில் ஒலிம்பிக் சம்பியன் சீனாவின் லின் டான் உட்பட 4 பேர் பெயரும், இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் பெயரும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம் வென்ற உலகின் 2ஆம் நிலை வீராங்கனையான சாய்னா கடந்த ஆண்டில் இந்தோனேஷிய ஓப்பன் சூப்பர் சீரிஸ், டென்மார்க் ஓப்பன், சுவிஸ் ஓப்பன், தாய்லாந்து ஓப்பன் ஆகிய போட்டிகளில் பட்டம் வென்றுள்ளார்.

அவருடன் முதல் நிலை வீராங்கனை சீனாவின் லி சூய்ருய், ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற சீனாவின் வாங் யிஹான் ஆகியோரும் இந்த விருதுக்கான பிரிவில் இடம் பெற்றுள்ளனர். விருது பெறுவோர் விபரம் மே 18ஆம் திகதி அறிவிக்கப்படுகிறது.



# மாவட்ட வலைப்பந்தாட்டம் கிண்ணம் பல்கலை வசம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். பல்கலைக் கழக அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொணடது.

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம், வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் மற்றும் இளையோர் அமைப்பு ஆகியன இணைந்து, மக்கள் வங்கியின் அனுசரணையில் யாழ். மாவட்ட 18 வயதுக்கு மேற்பட்ட வலைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் வலைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை கடந்த செவ்வாய்க்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடத்தியது.

இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல வலைப்பந்தாட்ட அணிகள் பங்குகொண்டபோதும், இதன் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும்,இராமநாதன் மகளிர் அணியும் மோதின.

தொடக்கத்தில் உத்வேகமாக விளையாடிய இராமநாதன் மக-ளிர் அணி, முதல் சுற்றினை 11:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

எனினும் பின்னர் சுதாகரித்துக் கொண்ட யாழ். பல்கலைக்கழக அணி இரண்டாவது சுற்றினை 11:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி ஆட்டத்தில் விறுவிறுப்பினை ஏற்படுத்தியது.

தொடர்ந்து 3ஆம், 4ஆம் சுற்றுக்களில் உத்வேகத்துடன் விளை யாடிய யாழ். பல்கலைக்கழக அணி, 14:06, 15:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.

இறுதியில் யாழ். பல்கலைக்கழக அணி 49:31 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று மாவட்ட மட்ட சம்பியனாகியது.

இச்சுற்றுப்போட்டியில், சிறந்த புள்ளி பெற்ற வீராங்கனையாக யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த என்.மனோசினி, சிறந்த தடுப்பாட்ட வீராங்கனையாக இராமநாதன் மகளிர் கல்லூரி அணியைச் சேர்ந்த எஸ்.கோபிகா, சிறந்த மத்திய வரிசை வீராங்கனையாக யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த ரி.அபிதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டி நிகழ்வில் மக்கள் வங்கியைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டு ஆவர்லர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர்.









தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவியுடன் கோண்டாவில் அமரகவி விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில், நல்லூர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் இவீந்திரதாசன் விளையாட்டு உபகரணங்களை வழங்கியமை குறிப் பிடத்தக்கது.

## கிளிநொச்சி வலய சதுரங்கம் வெற்றியீட்டிய பாடசாலைகள்

(கிளிநொச்சி)

15 மற்றும் 19 வய துப் பிரிவு ஆண், பெண் களுக்கிடையில் நடத்தப்பட்ட கிளிநொச்சி கல்வி வலய படசாலைகளுக் கிடையிலான சதுரங்கப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

15 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை கிளிநொச்சி மகாவித்தியாலயம், இரண்டா மிடத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரி, மூன் றாமிடத்தை வட்டக்கச்சி மகாவித்தியாலயம் ஆகிய அணிகளும், 15 வயது பெண்கள் பிரி வில் முதலாமிடத்தை கிளிநொச்சி மகாவித்தி யாலயம், இரண்டாமிடத்தை உருத்திரபுரம் மகா வித்தியாலயம், மூன்றாமிடத்தை வட்டக்கச்சி மகாவித்தியாலயம் ஆகிய அணிகள் பிடித்துக் கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை கிளிநொச்சி மகாவித்தியாலயம், இரண்டா மிடத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரி, மூன்றா மிடத்தை பளை மத்திய கல்லூரி ஆகிய அணி களும், 19 வயது பெண்கள் பிரிவில் முதலா மிடத்தை வட்டக்கச்சி மகாவித்தியாலயம்,இரண் டாமிடத்தை இராமநாதபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடத்தை கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆகிய அணிகள் பிடித்துக் கொண்டன.

## சங்கானை கோட்ட மட்ட பெருவிளையாட்டு முடிவுகள்

சாங்கனை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளை யாட்டுப் போட்டி முடிவுகள், அதன் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செல்வி அ.சா. மரியாம்பிள்ளையினால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம் வருமாறு:

**மென்பந்து கிரிக்கெட்**

ஆண்கள் பிரிவில் : முதலாமிடத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, இரண்டாமிடத்தை வட்டு இந்துக் கல்லூரி, மூன்றாமிடத்தை வட்டு மத்திய கல்லூரி ஆகிய அணிகள் பிடித்துக் கொண்டன.

பெண்கள் பிரிவில் : முதலாமிடத்தை விக்ரோறியாக் கல்லூரி, இரண்டாமிடத்தை வட்டு மத்திய கல்லூரி, மூன்றாமிடத்தை பண் ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் ஆகிய அணிகள் பிடித்துக் கொண்டன.

**வலைப்பந்து:** 15 வயதுப் பிரிவில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் முதலாமிடத்தையும், விக்ரோறியாக் கல்லூரி இரண்டாமிடத்தையும், அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டன.

17 வயதுப் பிரிவில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் முதலாமிடத்தையும், விக்ரோறியாக் கல்லூரி இரண்டாமிடத்தையும், வட்டு மத்திய கல்லூரி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

19 வயதுப் பிரிவில் விக்ரோறியாக் கல்லூரி முதலாமிடத்தையும், வட்டு இந்துக் கல்லூரி இரண்டாமிடத்தையும், வட்டு மத்திய கல் லூரி மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டன.

**கரப்பந்து பெண்கள்:**15 வயதுப்பிரிவில் சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம் முதலாமிடத்தையும், அராலி கிழக்கு அ.மி.த.க. பாட-சாலை இரண்டாமிடத்தையும், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி யாலயம் மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டன.

17 வயதுப் பிரிவில் வட்டு இந்துக் கல்லூரி முதலாமிடத்தையும், விக்ரோறியாக் கல்லூரி இரண்டாமிடத்தையும், சங்கானை சிவப்பிர காச மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

19 வயதுப் பிரிவில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் முதலாமிடத்தையும், வட்டு இந்துக் கல்லூரி இரண்டாமிடத்தையும், விக்ரோறியாக் கல்லூரி மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டன.

**கரப்பந்து ஆண்கள்:** 15 வயப் பிரிவில் விக்ரோறியாக் கல்லூரி முதலாமிடத்தையும், அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் இரண்டா மிடத்தையும், சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம் மூன்றா மிடத்தையும் பிடித்துக் கொண்டன.

17 வயதுப் பிரிவில் விக்ரோறியாக் கல்லூரி முதலாமிடத்தையும், வட்டு. மத்திய கல்லூரி இரண்டாமிடத்தையும், சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டன.

19 வயதுப் பிரிவில் சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம் முதலாமிடத்தையும், வட்டு மத்திய கல்லூரி இரண்டாமிடத்தையும், வட்டு இந்துக் கல்லூரி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

# மரணத்தை தடுக்க மரதன் போட்டிக்கு வரையறை

(கொழும்பு)

பதினைந்து வயதுக்குக்குறைவான மாண வர்களை மரதன் போட்டிகளிலோ, கிராமங் களினூடாக ஓடும் போட்டிகளிலோ ஓடுவது தடை செய்யப்பட்டுள்ளது.1500 மீற்றரை விட கூடுதல் தூரஓட்டப் போட்டிகளில்பங்கு பற்றுவதற்கு முன் அவர்களை மருத்து வப் பரிசோதனைக்குட்படுத்துவது கட்டாயமாக் கப்பட்டுள்ளது என விளையாட்டு மருத்து வப் பிரிவுப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அர்ஜுன டி சில்வா தெரிவித்தார்.

தூர ஓட்டப்போட்டிகளில் பங்கேற்ற சில மாணவர்கள் திடீரென மரணமான சம்பவங் கள் அடுத்தடுத்து இடம்பெற்றன.இதுகுறித்து கூடுதல் கவனம் செலுத்திய ஜனாதிபதி, விளையாட்டு மருத்துவப் பிரிவுக்குத்தேவை யான ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆலோசனைகளின் அடிப்படையில் மாணவர்கள் மரதன் போட்டிகளில் ஈடுபட தடைவிதிக்கப்படுவதாக டாக்டர் அர்ஜுன டி சில்வா கூறினார்.

விளையாட்டுக்களில் ஈடுபடுகையில் திடீர் நோய்களினால் மாணவர்கள் மரண மடைவதைத் தடுப்பதற்கான ஆரம்ப நடவ டிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வயது மட்டத்தினரையும் ஈடு படுத்த முடியுமான ஓட்டத்தூரம் குறித்தும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 11 வயதான மாணவர்களை 5 கிலோ மீற்றர் தூரம் வரையான ஓட்டப்போட்டியில் ஈடுபடுத்த முடியும். 9 வயது மாணவர்கள் 3 கிலோ மீற்றரை விட தூரப் போட்டிகளில் ஈடுபடுத்த முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1500, 3000, 5000 மரதனோட்டம், சைக் கிளோட்டப்போட்டிகள் என்பவற்றில் ஈடு படுத்தும் மாணவர்களை போட்டிக்கு முன் கட்டாயம் மருத்துவப் பரிசோதனைக்குட் படுத்தி தகுதிச் சான்றிதழ் பெறவேண்டும் எனவும் மருத்துவப் பிரிவு தெரிவித்தது.

இது குறித்து பாடசாலை அதிபர்கள் விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சினூடாக பாடசாலைகளுக்கு சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ள அதேவேளை விளையாட்டுத்துறை அமைச்சு விளையாட் டுக் கழகங்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களை பின்பற்றாத அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் டாக்டர் அர்ஜுன டி சில்வா கூறினார். வைரஸ்காய்ச் சலினால் பீடிக்கப்பட்ட மாணவர்களை எக் காரணம் கொண்டும் விளையாட்டுக்களில் ஈடுபடுத்தக் கூடாது என பெற்றோர் கோரப் பட்டுள்ளனர்.

இந்த வருடம் முதல், சகல மாணவர் களும் விளையாட்டுக்களில் ஈடுபடுவது கட் டாயமாக்கப்பட்டுள்ளது. இருந்த போதும் மாணவர்களுக்கு திடீர் சுகயீனங்கள் உடல் கோளாறுகள் ஏற்படுவதைத் தடுக்க நடவ டிக்கை எடுத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சு கூறியது.

புலமைப் பரிசில் பரீட்சையின் பின் சகல மாணவர்களையும் மருத்துவப் பரிசோதனைக் குட்படுத்தவும் விளையாட்டுத்திறமைகளை ஊக்குவித்து சான்றிதழ் வழங்கவும் தீர் மானிக்கப்பட்டுள்ளது. க. பொ. த. சாதாரண தர வகுப்பில் விளையாட்டை ஒரு பாடமாக அறிமுகப்படுத்தவும் பல்கலைக்கழக தெரி வின் போது விளையாட்டு சாதனைகளுக்கு புள்ளி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சு என்பன இணைந்து முன் வைத்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டது.

# மலட்டு அரசியல் சிந்தனையுடன் மக்களை அவதியில் வைத்திருக்கிறார்கள்

- என்.நடேசன் -



ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் சிறிய அங்கம். தனிமனிதனின் சிந்தனையின் ஒட்டு மொத்த சேர்க்கைதான் சமூகத்தின் சிந்தனை ஓட்ட மாகும். உயிர் தப்புவதற்கும், வாழுவதற்குமாகவே குழந்தை பிறந்தவுடன் அழுகிறது. இது மனிதனுக்கு மட்டுமல்ல எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான விதி.

முப்பது வருட அரசியல், முப்பது வருட ஆயுதப் போராட்டம் இலட்சம் உயிர் களைக் குடித்து பெரும்பாலான மக்களை நிர்க்கதியாக்கியதுடன் பலரை நாட்டைவிட்டு நிரந்தர மாக தள்ளிவிட்டது. உதாரண-மாக என் போன்றவர்கள், சமூகத்தில் இருந்து நிரந்தரமாக வெளித் தள்ளப்பட்டுவிட்டோம்.

இந்த நிலை எப்படி ஏற்பட்டது?

இன்னல்களில் இருந்து மக்கள் தப்பி உயிர் வாழ வேண்டும் என்பது சந்தர்ப்ப வாதமென நினைத்தால் அதை பெருமையுடன் ஏற்கத்தயார். நானூறு வருடங்கள் எகிப்தில் அடிமையாக இருந்த யூத மக்களை மோசஸ் செங்கட லைத் தாண்டி கொண்டு சென்றது அந்த மக்களின் உயிர்களை பாதுகாப்பதற்காகத் தான். அப்படி இல்லாமல் எகிப்திய அரசர்களை எதிர்க்கச் சொல்லி இருக்கலாம்.. யூத மக்களுக்கு கடவுளின் துணை இருந்ததாக சொல்லுகிறார்கள். அப்படி இருந்தும் அவர்கள் போராடவில்லை. நாளை போராட இன்று வாழவேண்டும்...

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து பார்த்தால் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் எனப் பல அளவுகோல்களை உபயோகித்தால் மற்றய சமுகத்தை விட ஏன் சிங்கள சமூகத்தை விட முஸ்லிம் மக்கள் முன்னேற்றமடைந்தது இலங்கைக்கு சென்று பார்ப்ப வர்களுக்கு தெரியும். இணை யத்தில் மட்டும் இலங்கையை பார்ப்பவர்களுக்கு அது கஷ்டமான காரியம்.

அஷ்ரப் அவர்களது அபிவிருத்தித் திட்டங்கள், கிழக்கு மாகணத்தில் முஸ்லிம் மக்களுக்கு பெரும்பயனைக் கொடுத்திருக்கிறது. பதியுதீன் மஹ்முத் அவர்கள் இலங்கை முழுவதும் உள்ள முஸ்லிம் மக்களுக்கு கல்விக் கண்களைத் திறந்து வைத்தவர். அதேபோல் கிழக்கு மாகாண மக்கள் எக்காலத்திலும் மறக்க முடியாத மனிதர் அஷ்ரப். மேல் மாகாணத்தை தவிர வேறு எந்த மாகாணத்தில் இரண்டு பல்கலைக்கழகங்கள் உள்ளன? எங்கே இரண்டு பெரிய துறைமுகங்கள் உள்ளன? எவ்வளவு காணிகள் அவர் காலத்தில் முஸ்லிம் மக்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் கிடைத்திருக் கிறது தெரியுமா? ஒரு வகை யில் பார்த்தால் புத்தசமய குருமாருக்கும் ஆத்திரமூட்டிய விடயங்கள் அம்பாறையில் நடந்த காணி விடயம்தான் தொடக்கப் புள்ளி.

தற்போதைய கிழக்கு மாகாணம் இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டமைப்பு அரசியலில் சாதாரணமாக நடப்பவைதான். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் செய்தது அவர்களைப் பொறுத்தவரை இராஜதந்திரம். நான் கிழக்கு மாகாணத் தமிழனாக இருந் தால் எனது பங்கையும் சேர்த்து அவர்கள் அனுபவிக் கிறார்கள் எனக் கவலைப்படு வேன். அதே நேரத்தில் அதற்கு மாற்றாக அரசியல் திட்டம் வைக்க முடியாத முட்டாள் தமிழ்த் தலைவர்கள் இருக்கும் வரையும் அதுதான் தலைவிதி என மனத்துக்குள் சபித்துக்கொள்வேன்.

இலங்கையின் தென்பாகத்தில் முஸ்லிம்கள் தங்கள் கலை கலாசாரத்தை பாதுகாத்து வாழுகி றார்கள் எனும்போது அவர்கள் அடர்ந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் அதைப் பாதுகாக்க சுயாட்சி வேண்டும் என்பது இலங்கை யைப் பற்றி அடிப்படை அறிவில்லாத கருத்து....


இலங்கையில் எல்லா சமூகங்களும் பிரிந்துதான் அரசியலில் இருக்கிறார்கள். சிங்களவர்களில் இருபதுக்கு மேற்பட்ட கட்சிகள் உள்ளன. அதில் பதினெட்டு கட்சிகள் ஆட்சியில் அரசாங்கத்தோடு இணைந்திருக்கிறார்கள். அது ஜனநாயகம். மக்கள் செம்மறியாடுகள் போல் அல்ல. வெவ்வேறாக சிந்திப்பவர்கள். மேலும் இலங்கை யாப்பில் பல கட்சிகளுக்கு இடம் உள்ளது. இதை ஒரு நல்ல விடயமாகவே கருதுகிறேன். மேலும் எல்லோரும் ஒன்றாக சிந்திக்க வைக்க வேண்டும் ஒரே அணியில் இருக்க வேண்டும் எனச் சிந்தித்தால் அதை நடைமுறைப்படுத்த ஹிட்லர், ஸ்ராலின் போல் மில்லியன் கணக்கிலோ, பிரபா-கரன் போல் ஆயிரக்கணக் கிலோ கொலைகளைச் செய்ய வேண்டும். ஆக மொத்தத்தில் கொலையின் மூலம்தான் ஒற்றுமையைக் காணலாம்....

இலங்கையில் பெரும்பான் மை இனம் இரண்டாகப் பிரிந்து ஆளும்கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் கடந்த அறுபது வருடமாக ஆள்கி றார்கள். தற்போதைய அரசுக்கு முன்பு இருந்த அரசுகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஜெயவர்த்தனாவைத் தவிர வைத்திருக்கவில்லைத்தானே? அப்பொழுது எமது அரசியல்வாதிகள் என்ன செய்தார்கள்? இப்பொழுது ராஜபக்ஷதான் பிரச்சினை எனச் சொல்பவர்கள், முன்பும் ஒரு துரும்பையும் அசைக்கவில்லைத்தானே?

தற்போதைய காலத்தில் கூட சிறுபான்மையினரின் உதவி இல்லாமல் அரசியல் அமைப்பை மாற்ற முடியாது தானே? அதனால் தான் எதிர்த்து நின்ற முஸ்லிம் ஐக்கிய முன்னணிக்கட்சி அரசாங்கத்தினருடன் சேர்ந்தது. தமிழர் அரசியல் தலைவர்கள் மலட்டு அரசியல் சிந்தனையுடன் மற்றவர்களை குறை சொல்லிக்கொண்டிருந்தாலும் தமிழ்த்தேசியம் என்ற பிணத்துடன் கடந்த 60 வருடங்களாக குடும்பம் நடத்தி வருகிறார்கள். அதனால்தான் எந்தப்பலனும் கிடைக்கவில்லை.

அரசியல் என்பது ஆயுதம் அற்ற போர். இங்கே அறிவு இராஜதந்திரம் வேண்டும். தமிழ்நாட்டு திராவிட அரசியல் வாதிகளை நான் உதாரண புருசர்களாக நினைப்பதில்லை. ஆனாலும் அக்காலத்தில் வடக்கு வாழுகிறது தெற்கு தேய்கிறது என ஒப்பாரி வைத்தவர்கள் கடந்த பதினைந்து வருடமாக மத்திய அரசியலில் பங்கேற்று தென்மாநிலங்களை முன்னேற்றி இருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் தெற்கு, வடக்கு கோஷம் போடுவதில்லை?

# உங்கள் தாம்பத்தியம் எப்படி?



ஜெர்மனியைச் சேர்ந்த சமூக வாழ்வியல் பேராசிரியர் ஒருவர், உலகம் முழுவதும் சுற்றி, 5,000 தம்பதியர்களை பேட்டி கண்டு, தாம்பத்தியம் பற்றிய சில உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்...

★ பெரும்பாலான காதலர்கள், முதலில் காதல் வயப்பட்டு இணைகின்றனர். நடு நடுவே சில தகராறுகள் எழுந்து, வளர்ந்து மறைகின்றன. இறுதியில், காதல் தீவிர மாகி, திருமணத்தில் நிறைவு பெறுகிறது.

★ திருமணமானதும் சில நாட்கள் சுற்றுலா, உறவினர் வீட்டு விசேஷங்கள் ஆகியவற்றில் கலந்து கொண்டு, காலம் கழிக்கின்றனர்.

★ திருமணமாகி இரண்டு ஆண்டுகள் ஆனதும், கணவன் - மனைவியின் பொழுதுபோக்கு கலந்துரையாடலிலேயே திருப்தியடைகிறது. சாப்பிடும் போதும், இரவு படுக்கையறையிலும் அரை மணி நேரம், ஒரு மணி நேரம் பேசினால் அதிகம்.

★ போகப் போக பேச்சு குறைகிறது. ஆறாவது ஆண்டு முதல், தேவைப்படும்போது பேசுவது என்றாகிறது. எட்டாவது ஆண்டிலிருந்து கணவன் - மனைவி பேசிக்கொள்வது மேலும் குறைந்து விடுகிறது. பிள்ளைகள் பக்கத்தில் இருந்தால் பேச்சு தொடரும்.

★ ஆரம்பத்திலிருந்த மோகம் கணவனுக்குக் குறைந்து விடுவதால், மனைவிக்கு அன்பளிப்பை படிப்படியாகக் குறைத்து விடுகிறான். பிறகு, தனியாகப் பணம் சேர்த்து, குஷியாகப் பொழுது போக்கத்-தொடங்குகிறான்.

★ திருமணமான பின், மூன்றிலிருந்து எட்டாம் ஆண்டுக்குள்ளே தான், பெரும்பாலான விவாகரத்துக் கோரிக்கைகள் வருகின்றன.

உங்கள் தாம்பத்தியம் எப்படி? ஜெர்மன் பேராசிரியரின் கணிப்பு சரிதானா; ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்!

# வைக்கோல் கன்று!

"பால்... பால்.." என்று கூவி இசைநயத்துடன் வீட்டுக் கதவைத் தாளம் தப்பாமல் தட்டும் பால்கார மணி யும் வந்து போய்விட்டார். அடுத்து வர வேண்டிய பத்திரிகைப் பையனை இன்னும் காணவில்லை. காலையில் எழுந்ததும் பத்திரிகையின் முகத்திலே விழித்துப் பழக்கப்பட்ட புரட்சிக் கவிஞருக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை.



"ஏன் இன்னும் பத்திரிகைப் பையன் வரவில்லை?" என்று கேட்டபடி வெறும் லுங்கி கட்டிய வெற்றுடம்போடு வீட்டுக்கு வெளியே உள்ள தெருவாசலில் வந்து நிற்கிறார் கவிஞர்.

வீதியில் பால் கறந்துவிட்ட மாடு-களையும்... கறக்க வேண்டிய மாடுகளையும் ஓட்டிச் செல்லும் மனிதர்களையும், மாடு ளின் பின்னால் குதியாட்டம் போட்டுச் செல்லும் கன்றுக்குட்டிகளையும் பார்த்து ரசித்து விமர்சனம் செய்தபடி தன்னை மறந்து நின்று கொண்டிருக்கிறார் கவிஞர்.

பின்புறமாக முக்காரம் போட்டபடி ஓடிவந்த ஒரு கன்றுக்குட்டி அவர் மீது மோதிவிட்டு ஓடுகிறது. நிலை தடுமாறிய கவிஞரைக் கீழே விழாமல் தாங்கிப் பிடிக்க பதற்றத்துடன் முயல்கிறேன். "அட... இந்தக் கன்றுக்குட்டியின் உடம்பில் எத்துணை ஆற்றல் பொதிந்திருக்கின்றது பார்த்தாயா? இளங்கன்று பயமறியாது என்பார்களே, அதற்கு இலக்கணமாக இது ஓடுகிறது. எவ்வளவு மகிழ்ச்சியுடன் அது தன் தாயின் பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறது.


இந்த இளங்கன்றின் மகிழ்ச்சி இப்படியே தொடரும் என்று நினைக்கிறாயா? அதுதான் இல்லை. அதற்குச் சேர வேண்டிய பாலையும் அதன் தாயிடம் இருந்து பறித்துக் கொள்வார்கள். பிறகு அது பாலின்றி வாடி, எலும்பும் தோலுமாக மாறி நடைப்பிணமாகி ஒருநாள் உயிரை விட்டுவிடும். அதன் தோலுக்குள் வைக்கோலைத் திணித்து, பொம்மைக் கன்றாக்கி, ஏமாற்றி அதன் தாயிடமிருந்து மறுபடியும் பாலைத் திருடிக் கொள்வார்கள். அது இப்படி உயிரோட்டமாக ஓடும் காட்சியையும், இதே கன்று, நாளை வைக்கோற் கன்றுப் பொம்மையாக நிற்கும் காட்சியையும் நினைக்கும்போது எனக்கு வேதனையாக இருக்கிறது" என்று வருத்தத்துடன் கூறுகி-றார்.

('நினைவலைகளில் பாவேந்தர்' புத்தகத்தில் பொன்னடியான்.)

# சத்தியமே கலைக்கு ஆதாரம்

- சாரு நிவேதிதா -

படத்தின் இன்னொரு பலவீனம், இசை. ஜி.வி. பிரகாஷ் குமார் தான் கேங்க்ஸ் ஓ:.ப் வாஸே பூருக்கு மிக அற்புதமாகப் பின்னணி பிரகாஷ் குமாரின் பின்னணி இசை-தான். இவர்தானே கேங்க்ஸ் ஆ:.ப் வாஸேபூருக்கு அவ்வளவு அற்புதமாக இசை அமைத்தவர்? என்று ராஜேஷிடம் ஆச்சரியப்பட்டதற்கு அதற்கும் அவர் இடைவேளை ஸ்டில் காட்டப்படுகிறது. இப்படி ஒரு பாட்டைக் கேட்ட பிறகும் தியேட்டரிலேயே உட்கார்ந்திருக்க மனம் வரவில்லை. ஆனால் விமர்சனம் எழுத முடியாது. "அட போய்யா, இடைவேளைக்குப் பிறகுதான் படமே" என்பார்கள் அல்லவா, அதனால்தான் உட்கார்ந்திருந்தேன். காட்சிகளால்



இசை அமைத்தவர். இவரேதான் ஆயிரத்தில் ஒருவனுக்கும் இசை அமைத்தவர். ஆயிரத்தில் ஒருவன் ஏதோ மத்திய கால கட்டத்தில் நடக்கும் சோழன் கதை. அதற்கு எந்தச் சம்பந்தமும் இல்லாத இன்றைய மெட்டல் ம்யூசிக்கைப் போட்டு நம் செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றிய அதே வேலையைத்தான் பரதேசியிலும் செய்திருக்கிறார். கோடி கோடியாய் சம்பளம் வாங்கிக் கொண்டு வெறும் வாத்தியக் கருவிகளை மட்டுமே வைத்து ஆட்டிக் கொண்டிருந்தால் போதுமா? இசையமைப்பு என்பது மூளை வேலையும்தான். கதை நடப்பது எந்தக் கால கட்டம்? கதையின் சாரம் என்ன? கதை என்னவிதமான மனோலயத்தை உண்டாக்குகிறது? இதையெல்லாம் ஒரு இசையமைப்பாளர் யோசிக்க வேண்டாமா? சம்பந்தா சம்பந்தமே இல்லாமல் நாம் பப்களில் கேட்கின்ற இசையைக் கொடுத்திருக்கிறார். படம் பூராவும் ஒரே இரைச்சலாகவே இருந்தது. தியேட்டரை விட்டு எழுந்து விடலாம் என்று ஒவ்வொரு நிமிடமும் என்னைத் துரத்திக் கொண்டிருந்தது பதில் வைத்திருந்தார். எல்லாமே இயக்குனர் கையில்தான் இருக்கிறது என்றார். அவர் எப்படிக் கேட்கிறாரோ அப்படிக் கொடுப்பார். அடப் பாவி களா? இசையமைப்பாளர் என்றால் பரோட்டா மாஸ்டரா? முட்டைப் பரோட்டா என்றால் முட்டைப் பரோட்டா, கொத்துப் பரோட்டா என்றால் கொத்துப் பரோட்டா! என்னய்யா இது வாழ்க்கை!

அடுத்து, பாடல்கள். எடுத்ததற்கெல்லாம் பாட்டு. ஒரு பாட்டும் சகிக்கவில்லை. அழுவாச்சி படம் என்பதால் ஒரே அழுகை வேறு. அதிலும் சாலூர் கிராமத்தினர் கிராமத்தை விட்டு தேயிலைத் தோட்டத்துக்கு நடந்தே வரும் காட்சியில் கேட்கும் பாடல் இருக்கிறதே, தமிழ் சினிமா இந்த ஜென்மத்தில் உருப்படுவதற்கான சாத்தியமே தெரியவில்லை. ஒரு மக்கள் கூட்டம் தங்கள் ஊரை விட்டுக் கிளம்பி வரும் போது ஒரு நீண்ட பாடலைப் போட்டுத்தானா மக்களிடம் சோக உணர்வை எழுப்ப முடியும்? இதை வைரமுத்து வேறு ரத்தத்தில் எழுதினாராம்! அவ்வளவு காவிய சோகம் பாருங்கள்! சகிக்கவில்லை. டி. ராஜேந்தர் பாடும் சோகப் பாடல் மாதிரி இருக்கிறது. அப்போதுதான் விளக்க முடியவில்லை என்று ஒரு இயக்குனர் உணர்ந்தார் என்றால் அவர் அந்தப் படத்தில் தோல்வி அடைந்து விட்டார் என்றே பொருள்.

நான் இந்தக் கட்டுரையில் குறிப்பிட்ட holocaust படங்களில் எல்லாமும் ஆயிரக் கணக்கான மனிதக் கூட்டம் தங்கள் வாழ்விடங்களிலிருந்து வேறு இடங்களுக்குச் செல்லும் "பயணம்" காண்பிக்கப்படுகிறது. அதையெல்லாம் பாருங்கள்" நான் ஏன் பரதேசியை இவ்வளவு சாடுகிறேன் என்று உங்களுக்குப் புரியும்.

இறுதியாக சில விஷயங்கள்.

Pleasure of the Text என்று ஒரு விஷயத்தைப் பற்றி Roland Barthes குறிப்பிடுவார். அது என்ன என்றால், நாம் எந்த ஒரு கலைப்படைப்பை ரசித்தாலும் அது எவ்வளவு பெரிய துயரமாக இருந்தாலும் அது நமக்கு ஒரு துய்ப்பு உணர்வைத் தர வேண்டும். அதைக் கேட்கும் போதோ படிக்கும் போதோ பார்க்கும் போதோ நம் ஆன்மா சிலிர்க்க வேண்டும் நமக்குள் ஏதோ ஒன்று நடக்க வேண்டும். அதுதான் பிரதியின் இன்பம்.

அப்படிப்பட்ட நயம் எதுவுமே பரதேசியில் இல்லை. விக்ரமாதித்யன், கூன் கிழவி, நாஞ்சில் நாடனின் வசனம் ஆகிய மூன்றைத் தவிர.

இந்தப் படத்தோடு நீங்கள் பார்க்க வேண்டிய படங்களாக இரண்டை சிபாரிசு செய்கிறேன். Tomaz Alea இயக்கிய The Last Supper என்ற கியூபப் படம். கரும்புத் தோட்டத் தொழிலாளர்களின் அடிமை வாழ்க்கையைச் சொல்லும் காவியப்படம். 2. Jorge Sanjines இயக்கிய Yawar Mallku. Blood of the Condor. இந்தப் படம் யூட்யூபிலும் கிடைக்கிறது. இதையெல்லாம் பார்த்தால்தான் இந்தக் கட்டுரையில் நான் சொல்ல வருவது உங்களுக்கு இன்னும் நன்றாகப் புரியும்.

சத்தியமே கலையின் வெற்றிக்கு ஆதாரம். அந்த சத்தியம் பரதேசியில் இல்லை.

(தொடரும்)

# தெரியுமா?



இன்றைய டாக்டர்கள் வெள்ளை நிறக் கோட் அணிந்து கொள்வதைப் போல பண்டைய கால டாக்டர்கள் மான் தோலையே அணிந்து கொள்வார்கள்.

- 1862ஆம் ஆண்டுதான் முதன்முதலாகக் கால் அளவுக்கு ஏற்றபடி செருப்பு தயாரிப்பது கண்டுபிடிக்கப்பட்டது.
- முதன்முதலில் ஒலிபெருக்கி 1900ஆம் ஆண்டு பாரிசிலுள்ள ஈ:.பிள் டவரின் உச்சியில் பயன் படுத்தப்பட்டது.
- ரோமானியர்கள்தான் முதன்முதலில் [illegible]முகங்களை உருவாக்கியவர்கள்.
- சூரியனை "அப்பல்லோ" என்று பெயரிட்டுக் கடவுளாக வழிபட்டவர்கள் கிரேக்கர்கள். உடல்நலத்தைத் தரும் தெய்வம் அப்பல்லோ என்பது அவர்களின் நம்பிக்கை.
- ஏரியிலோ நதியிலோ மூழ்கினால் மிக விரைவில் மரணம் நேரிடும். ஆனால் கடல்நீரில் மூழ்கினால் உயிரிழப்பதற்கு சற்று அதிக நேரம் பிடிக்கும். இதற்குக் காரணம் கடல்நீரிலுள்ள உப்புத்தன்மைதான்.
- உலகம் முழுவதும் ஓர் ஆண்டுக்குச் சராசரியாக 1 கோடியே 60 இலட்சம் இடிகள் விழுகின்றன. ஒரு நாளைக்கு 6 இலட்சம் மின்னல்கள் வெட்டுகின்றன.

# ஆச்சரியம்

ஜோனதன் ஸ்வி:.ப்ட் தனது "கலிவர்ஸ் ட்ராவல்" (1726) என்ற நூலில் இரண்டு சந்திரன்கள் செவ்வாயை வட்டமிடுவதுபோல கற்பனையாக எழுதியிருந்தார். விஞ்ஞானிகள் அதைக் கண்டுபிடித்தது பிறகுதான். அவர் அந்த நூலை எழுதிய காலங்களில் அறிவியல் நாவல்கள் வழக்கிலேயே இல்லை. அந்த நூலில் கோள்களின் வேகத்தையும், அளவையும் அவர் குறிப்பிட்டிருந்தார். வானவியல் விஞ்ஞானிகள் இதுபற்றி எழுதுவதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே அவர் எழுதியிருந்தார் என்பதுதான் ஆச்சரியம்.




# சினிமா சினிமா

◗ ரஜினியின் மூத்த மகள் ஐஸ்வர்யா தனுஷ் இயக்கிய முதல் படம் 3 தோல்வியடைந்தது. கார்த்திக்கின் மகன் கௌதம் நடித்த முதல் படம் கடலும் தோல்வி. இப்போது இருவரும் இணைந்து புதிய படத்திற்கு பூஜை போட்டுள்ளனர். இசை "கொலைவெறி" அநிருத் அல்ல, யுவன் சங்கர் ராஜா.

◗ வடிவேலுவின் அரசியல் குழப்பங்களைத் தொடர்ந்து, சிம்புதேவன் இயக்கும் இம்சை அரசன் 23ஆம் புலிகேசி இரண்டாம் பாகத்தில் மறுபிரவேசம் ஆவதாக இருந்தது. ஆனால் அதில் விஜயகாந்துக்கு எதிரான வசனங்களைச் சேர்க்க வடிவேலு கட்டாயப்படுத்தியதால் சிம்புதேவன் படத்தைக் கைவிட்டார். இப்போது "கஜ புஜ கஜ தெனாலிராமனும் கிருஷ்ணதேவராயரும்" என்ற புதிய முழுநீள காமெடி படத்திற்கு கதாநாயகனாக. ஒப்பந்தமாகியிருக்கிறார் வடிவேலு. யுவராஜ் இயக்குகிறார். டி.இமான் இசை.



◗ 94 இல் வெளியான "அமைதிப்படை"யின் இரண்டாம் பாகம் "நாகராஜ சோழன் எம்.ஏ.எம்.எல்.ஏ" என்ற பெயரில் படமாகிறது. முதல் பாகத்தில் கையாளாக இருந்து எம்.எல்.ஏ.வாக மாறிய சத்யராஜ், இதில் துணை முதல்வராகவும், பின்னர் முதல்வராகவும் பதவியேற்கிறார். இந்தப் படத்தின் மூன்றாம் பாகத்தையும் உருவாக்கும் வகையில் முடிவுக்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. மணிவண்ணன் இயக்கும் 50ஆவது படம். சத்யராஜ் நடிக்கும் 200ஆவது படம் என்ற சிறப்பம்சங்களையும் இப்படம் பெற்றுள்ளது.

◗ "விஸ்வரூபம்" முதல் பாகத்தை உருவாக்கும் போதே, இரண்டாம் பாகத்துக்குரிய பெரும்பான்மையான காட்சிகளைப் படமாக்கி முடித்து விட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் இந்த ஆண்டின் இறுதியிலே "விஸ்வரூபம் 2" வெளியாகுமாம். இந்தியாவில் மேலோங்கும் தீவிரவாதம்தான் கருப்பொருள் என்றாலும், அம்மா - மகன் சென்டிமெண்ட் அதிகமாக இருக்கும்" என்று கமல் அலுவலகம் தெரிவிக்கிறது.


◗ விக்ரம் நடிப்பில் ஷங்கர் எழுதி இயக்கும் படமான "ஐ" 150 கோடி செலவில் உருவாகிறது. இந்தியாவின் ஒலிம்பிக் கனவுதான் கதையென்று தெரிய வருகிறது. பெரும்பாலான காட்சிகள் சீனாவில்தான் படமாகியுள்ளன" என தெரிவித்திருக்கிறார் ஷங்கர்.





◗ "காந்தி" படத்தை இயக்கியவரும், புகழ்பெற்ற நடிகருமான ரிச்சர்ட் அட்டன்பரோ (89) முதுமையால் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் தனது மனைவியுடன் முதியோர் பாதுகாப்பு இல்லத்தில் தஞ்சம் அடைந்துள்ளார். அட்டன்பரோ 2008ஆம் ஆண்டில் தவறி கீழே விழுந்ததால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டு சக்கர நாற்காலியை பயன்படுத்த தொடங்கினார். 1947இல் பிரைடன் ரொக், 1997இல் ஜுராசிக் பார்க் என பல புகழ் வாய்ந்த திரைப்படங்களில் 50 ஆண்டுகளாக நடித்து வந்த அட்டன்பரோ "காந்தி" படத்தை இயக்கி 8 ஒஸ்கார் விருதுகளை பெற்றவர்.




வாரம் ஒரு பாடசாலை



# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)



கல்லூரி முதல்வர்
திரு.செல்லத்துரை சேதுராஜா

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேசத்தில் புகழ் பூத்து மிளிரும் பாடசாலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் . இப்பாடசாலை கல்வி அமைச்சர் C.W.W. கன்னங்கர அவர்களின் முன்னெடுப்பில் சகல வசதிகளோடும் உருவாக்கப்பட்ட மத்திய மகாவித்தியாலயம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் விடுதி வசதிகளுடன் கூடி இருந்தமையால் அகில இலங்கை ரீதியாக தரம் 8இல் புலமைப்பரிசிலில் சித்தியடைந்த ஏழை மாணவர்களை சேர்த்து கற்பித்து பெருமை பெற்ற கல்விக் கோயிலாகும்.

மலையகம், தென்னகம், மன்னார் , வன்னிப் பிரதேசங்களைச்சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி, விளையாட்டு, தேசிய சேவை பயிற்சிகளை வழங்கி அவர்களை ஆளாக்கிய பெருமை கொண்டது. "அறிவு ஒளிர சால்பு சிறக்க", என்ற மகுட வாசகத்தின் கீழ் ஒன்றுபட்டு உழைத்து நிற்கும் பாடசாலை.


யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னணி அரச பாடசாலையாக 1940 களிலிருந்து திகழ்ந்து வருகின்றது. 1950 களில் இக்கல்லூரியிலிருந்து விஞ்ஞானப் பிரிவில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட பலர் முதலாம் தரத்தில் பல்கலைக்கழகப் பட்டங்களை பெற்றுள்ளமை சிறப்பானதாகும். வடமராட்சி கல்விப் பாரம் பரியத்தின் ஊற்றுக்கண்களில் பாடசாலையின் இடம் குறிப்பிடத்தக்கது.




அமெரிக்க தூதரகத்தால் நடாத்தப்பட்ட ஆங்கிலப் பரீட்சையில் சித்தியடைந்து அமெரிக்கா செல்லவுள்ள மாணவி

**(புஸ்பலிங்கம் அனோஜா)**

பொதுப்பரீட்சைகள், விளையாட்டுக்கள், மொழித்திறன் போட்டிகள் தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் கணிதம் சார்ந்த போட்டிகளில் இக்கல்லூரி மாணவர்கள் வலய, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் வெற்றி பெற்று வருடாவருடம் தமது திறன்களை வெளிக்காட்டி வருகின்றனர். மாணவர்களது ஒழுக்கமும் ஆளுமை விருத்தியையும் மேம்படுத்துவதற்காக இக்கல்லூரியின் வளவசதிகளையும், வாய்ப்புக்களையும் இப்பிரதேச மக்கள் பயன்டுத்தி வருவது திருப்தியளிக்கின்றது. இந்நிலையில் இக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பணியாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினரின் விடாமுயற சியே இப் பாடசாலையின் முன்னேற்றத்திற்குக் காரணமாகும். முக்கியமாக தற்போதுள்ள அதிபர் இப்பாடசாலைக்கு கிடைத் தது இப் பாடசாலைக்கு மட்டுமல்ல, வடமராட்சிக்கே கொடுத்த பெரும் கொடையாகும். தன்னலம் பாராது பாடசாலை சமூகத்துக்கென தன்னைஅர்ப்பணித்து சேவையாற்றி வருகின்றார். மென்மேலும் இக்கல்லூரி பல சாதனைகள் படைக்க வேண்டும் என கல்வித் தாயை பிரார்த்திப்போம்.



தேசிய மட்டத்தில் வெற்றிபெற்ற கபடி அணி



பாடசாலை மாணவ தலைவர்கள்



விளையாட்டு மைதானம்



பாடசாலை முதல்வர், ஆசிரியர் குழாம்

# யுத்த சூழலில் முஸ்லிம் சமூகம் தன்னை வளப்படுத்தியுள்ளது

**– ஆசிரியர் ஏ.சி.ஜோர்ஜ்**

(குருநகர்)

"முப்பதாண்டு யுத்தச் சூழலில் தன்னை வளப்படுத்திக் கொண்ட சிறுபான்மை இனமாக முஸ்லிம் சமூகம் காணப்படுகிறது. எனினும் தொழிற் கல்வி, வர்த்தகம் அரச மற்றும் தனியார் கூட்டுத்தாபன உத்தியோகம், நாடாளுமன்ற அங்கத்துவம் மேலும், அமைச்சுகள் போன்ற சகல துறைகளிலும் தென்பகுதியினரை விடவும் உச்சத்துக்கு சென்றுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை யாழ். டி.சி. எம். கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற ஜெனிவாவிற்குப் பின்னர், கருத்தரங்கில் தொடக்கவுரை நிகழ்த்திய ஆசிரியர் எ.சி. ஜோர்ஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச மாக்சியக்குழுவைச் சேர்ந்த சொ. சிவபாலன் (சிற்பி) தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. தொடர்ந்து பேசுகையில் எ.சி.ஜோர்ஜ் கூறியதாவது,

யுத்தம் ஓய்ந்த பின்பாக ஜனநாயக செயற்பாடுகளில் பலவீனங்கள் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. உதாரணமாக குடிமக்களின் பிரச்சினைகளில் இராணுவத்தலையீடுகள், மக்களின் பூர்வீக இடங்களை கபளீகரம் செய்தல், வேறும் சிவில் நிர்வாக அலகுகளுக்குள் அரசுசார் உயரதிகாரிகள் முதற்கொண்டு மூக்கு நுழைத்தல் பெருகிவிட்டது என்றார். அடுத்துப் பேசிய சுகுசிறிதரன் கூறியதாவது:

"பொதுபலசேனா மற்றொரு இனப்பிரச்சினை முகாமாக உருவாகி வருகிறது" இலங்கையை பிரதேச, மாகாணமட்டங்களிலும் பல இனங்களைக் கொண்ட நாடாக்கவே அரசு முயற்சித்துவருகிறது. தமிழகத்தில் தோன்றிய மாணவர் எழுச்சி புதிய பலத்தைப் பாய்ச்சிய போதிலும், போகமுடியாத இடத்திற்கு வழி காட்டுவதாக அமைந்தால் பல வீனப்பட்டு விடும். அதேவேளை, அப்போராட்ட எழுசசி நீண்ட ஆயுளைக் கொண்டிருக்கப் போவதுமில்லை எனக் கூறினார்.

சொ. சிவபாலன், த.தியாகலிங்கம், தேவிபரமலிங்கம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.(68)

# சனசமுக நிலையத்தின் ஈஸ்ரர் கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு விழாவும் ஈஸ்ரர் கலை நிகழ்வுகளும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் முதலாம் திகதி திங்கட்கிழமையும் நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலைய தலைவர் லிகோறி நிர்மலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், கௌரவவிருந்தினராக யாழ்.மரியன்னை பேராலயபங்குத் தந்தை அருட்பணி ஆர்.ஏச். சகாநாயகம் அடிகள் சிறப்பு விருந்தினர்களாக ஜே/75 சுண்டுக்குளி தெற்கு கிராம உத்தியோகத்தர் ஆ.ஞானசேகரம் ஜே/75 சுண்டுக்குளி தெற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி எஸ்.ஜெயப்பிரியா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் 2012ஆம் ஆண்டில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவரை கௌரவிக்கும். பரிசில் வழங்கல், வரவேற்பு நடனம், பட்டிமன்றம் என்பன இடம்பெறவுள்ளது.



ஐக்கிய நாடுகளின் வெளிநாட்டு மற்றும் பொது நலவாய அமைப்பின் வதிவிடப்பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை சந்தித்து வடக்கின் அபிவிருத்தி செயற்திட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதைக் காணலாம். (படம் கே.நந்தகுமார்)

# தெல்லிப்பளை கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் கோட்டக்கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு, (முன்னைய தொடர்)

**இசையும் அசைவும் பிரிவு i**

ர.ருஸாணி (கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தி), கு.நிஷாந்தினி (மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை), கி.லோஜினி (தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை)

**இசை தனி பிரிவு ii**

வி. கனிஷ்டன் (குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை), இ.மிதுலா (அருணோதயக் கல்லூரி), தே.தர்சிகா ( இளவாலை மெய்கண்டான் மகா வித்தி)

பிரிவு iii

இ.சிவாஜன் (அருணோதயக் கல்லூரி), சி.சர்வேஸ்வரன் ( மல்லாகம் மகா வித்தியாலயம்), சு.சஞ்சிகா ( மகாஜனாக் கல்லூரி)

பிரிவு iv

த.பவதாரணி (யூனியன் கல்லூரி), சு.சுஜாதினி (குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை), பெ.சரணியா (அருணோதயக் கல்லூரி)

பிரிவு v

அ.சண்முகப்பிரயன் (யூனியன் கல்லூரி), ம.மகிழதினி (வயாவிளான் ம.ம.வி)

**இசை குழு பிரிவு i**

(யூனியன் கல்லூரி), (மகாஜனாக் கல்லூரி), அருணோதயக் கல்லூரி),

பிரிவு ii

(யூனியான் கல்லூரி), (வயாவிளான் ம.ம.வி)

**கவிதை ஆக்கம் பிரிவு i**

சி.வர்ணிகா (மகாஜனாக் கல்லூரி), ம.துர்ஷிகா (வயாவிளான் ம.ம.வி), பு.கோபிகா (குளமங்கால் றோ.க.த.க. பாடசாலை)

பிரிவு ii

கோ.சங்கீதா (யூனியுன் கல்லூரி), வா.விதுஷா (மகாஜனாக் கல்லூரி), ம.தர்ஷிகா (அருணோதயக் கல்லூரி),

**சிறுகதை ஆக்கம் பிரிவு i**

ஸ்ரீ.வேதிகா (அருணோதயக் கல்லூரி), சு.சோபிதா (மல்லாகம் மகா வித்தியாலயம்), ச.கின்சிலி (குளமங்கால் றோ.க.த.க. பாடசாலை)

பிரிவு ii

ஜெ.கௌதமி (அருணோதயக் கல்லூரி), பெ.லவனிதா (வயாவிளான் ம.ம.வி), ம.இனியாள் (மகாஜனாக் கல்லூரி) (தொடரும்...)

# பதிவிறக்கப் பெட்டகம்

இங்கு எழுத்தை யாரும் ஒரு பொறுப்பான வேலையாக பார்ப்பதில்லை. சமைப்பது, விருந்தினரை உபசரிப்பது போன்ற பணிகளை எழுத்துக்காக ஒதுக்கி வைக்க முடியுமா சொல்லுங்கள். முடியாது. ஏனென்றால் அலுவலக வேலை போல இது முறையானதாக கருதப்படுவதில்லை. எழுத்து வேலைக்கு சம்பளம் இல்லை, அலுவலகம் இல்லை என்பவை காரணமாக இருக்கலாம். **– அஞ்சனா அப்பச்சனா**

ஒரு படைப்புக்கான காரணத்தையும், நோக்கத்தையும் சொல்வதரிது. அது புரியவந்தால் எழுதுவதே கூட ஒரு முடிவுக்கு வரலாம். எழுதுவதென்பது ஒரு தேவை. அத்தேவை நமக்குள் உருவாவது. உரிய நேரத்தில் நம்முள்ளிருந்து வெளியேறுவது. எழுதுவது சுலபமல்ல. அதுவொரு கலை. கடுமையான பயிற்சி தேவை. ஒரு அகராதியின் அவ்வளவு சொற்களை அறிந்திருப்பதும், அவற்றை நேர்த்தியாக உபயோகிக்கும் வகைமையில் தேர்ந்திருப்பதற்கும் நிகரானது ஆகும். பல படைப்புகளை வாசித்துப் பெறும் அனுபவம் வேண்டும். அதை உள்வாங்கிக் கொள்ளும் திறனும் வேண்டும். பின்னர் நமக்கான மொழியில் சொல்லும் ஆளுமையில் அவர்களை வெல்லும் ஆற்றலும் வேண்டும். **– லெ க்ளேஸியோ**

எழுதுவது ஒரு தடகள வீரராவதற்கான பயிற்சியைப் பெறுவது போன்றதுதான். அதிலிருக்கிற ஏராளமான பயிற்சியினையும் வேலையினையும் முடிக்க வேண்டுமேயென யாரும் நினைக்கமாட்டேனென்கிறார்கள். தடகள வீரர் தினமும் பயிற்சி செய்வதைப் போல எழுத்தாளர் தினசரி எழுத வேண்டும். எழுதுகின்ற அநேகமும் பயன்படப் போவதில்லையென்றாலும் அதைச் செய்ய வேண்டியது இன்றியமையாதது. **– இசபெல் அலெண்டே**

எழுதும் வாய்ப்பு அமையுமானால் நாம் எதை எழுத நினைக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ளும் முயற்சியே எழுத்து. **– மார்கெரித் துராஸ்**

தேடிச் சந்தித்து மகிழ்ந்ததும், விலைகொடுத்தேனும் உரிமை பெற்று சந்தோஷித்ததுமான கணங்கள் கடந்த காலத்திற்கானவை. பிற மனிதர்கள் அல்லது நெருக்கடிகளிலிருந்து தப்பிப்பது எப்படி? என்கிற பதற்ற நொடிகளுடன் வாழ்க்கை என்றாகிவிட்டது. படைப்பாளிகளுக்கோ தங்களிடமிருந்தே தாங்கள் தப்பினால் போதுமென்ற கவலை. வெளியுலகிலிருந்து தங்களைத் துண்டித்துக்கொண்டு வாழப்பழகிய படைப்பாளிகள் ஒரு கட்டத்தில் அலுத்துப்போய் தங்கள் உறவை மீண்டும் வெளிமனிதர்களிடம் புதுப்பித்துக் கொள்ளும் தந்திரமே எழுத்தும் அதன் பிரதிகளும். மொழியும், எழுத்தும் தங்கள் தனிமைக்கு ஒளியூட்டக் கூடுமென்பதோடு, பிற மனிதரோடு தம்மை இணைத்துக் கொள்ளவும் உதவுமென நம்பிக்கை. அடைபட்டுக் கிடந்த மனக்கதவுகள் திறக்கப்பட, ஒருவகையாக சுயகாதலினின்று தப்பிக்கும் போக்குடன் தங்கள் சாயலுடனான மனிதர்களைப் படைத்து, தமது வாழ்க்கைச் சூழலையும் அக்கற்பனை மனிதர்களுக்குத் தாரை வார்ப்பவர்களானார்கள். அவர்களில் சிலர் பிரம்பைக் கையிலெடுத்த குருவாக படைப்பு மாந்தர்களை ஆட்டுவித்த கூத்தும் நடந்திருக்கிறது. காலம் மாறியது. யதார்த்தவாதிகள் வந்தார்கள். உண்மையைச் சொல்ல வேண்டும், சத்தியத்தை எழுத வேண்டும் எனத் தீர்மானித்தார்கள். ஒரு சம்பவத்தின் அடிப்படையில் அல்லது ஒரு நிகழ்வின் அடிப்படையில் சுற்றியுள்ள சமூகம் எடுக்கும் முடிவுகளுடன் முரண்பட்ட அவர்கள், தங்கள் கலகக் குரலை அல்லது குமுறலை எழுத்தில் பதிவு செய்தார்கள். மதாம் லஃபார்ழ் என்பவளின் உண்மை வரலாற்றின் அடிப்படையில் எழுதப்பட்ட குஸ்தாவ் ப்ளோபெருடைய [Gustav Flaubert] மதாம் பொவாரி [Madame Bovary], பெர்த்தே என்ற இளைஞனின் வாழ்க்கைச் சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு ஸ்டெந்தால் [Stendhal] எழுதிய சிவப்பும் கறுப்பும் [Le Rouge et Le Noir], சார்ள்ஸ்டிக்கென்ஸால்[Charles Dickens] சொல்லப்பட்ட அவரது சொந்த வாழ்க்கையான டேவிட் காப்பர் ஃபீல்ட், ஃபியோடோர் தாஸ்தோவ்ஸ்கியால் [Fyodor Dostoevsky] பகிர்ந்து கொள்ளப்பட்ட அவரது சைபீரிய சிறை வாழ்க்கை நினைவுகள் [The House of the Dead] ஆகியவற்றை நல்ல உதாரணங்களாகக் கொள்ளலாம்.

**– நாகரத்தினம் கிருஷ்ணா**

# மதமாற்றத்திற்கு எதிரான நடவடிக்கை

# கிறிஸ்தவர்களுக்கும் கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக பிரசாரம் செய்துவரும் பௌத்த கடும்போக்கு இயக்கமான பொது பலசேனா. கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பலவந்தமாக பௌத்தர்களை கிறிஸ்தவர்களாக மாற்றும் கிறிஸ்தவ சபைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அந்த அமைப்பின் உறுப்பினர் கீரமா ஜோதி தேரர் தெரிவித்துள்ளார். சில அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுகின்ற இவ்வாறான கிறிஸ்தவ அமைப்புக்கள், பலவந்தமான முறையில் மக்களை மனவசியத்துக்கு உட்படுத்தி கிறிஸ்தவர்களாக மாற்றி வருகின்றனர்.

இந்த அமைப்புகள் இலங்கையில் மதங்களாக பதிவு செய்யப்படுவதில்லை. எனினும் அவை அரச சார்பற்ற நிறுவனங்களாகவே இயங்குகின்றன. இவ்வாறு செயற்பட்ட அமைப்பு ஒன்றின் போதகர் ஒருவர் அண்மையில் திஸ்ஸ மஹாராமவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறான அமைப்புக்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க இருப்பதாக அந்த இயக்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். பௌத்த கடும்போக்கு அமைப்புக்கள் நாட்டில் முதலில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவே முனைப்புடன் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது . அதன் பின்னரே முஸ்லிம்கள் மீது கவனத்தை திருப்பியது.

# மும்மொழி அடையாள அட்டை

## விரைவில் என்கிறார் வாசு

(கொழும்பு)

மும்மொழி தேசிய அடையாள அட்டையை விரைவில் அறிமுகம் செய்வது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அடையாள அட்டை வழங்கல் எனது அமைச்சின் கீழ்இல்லை. எனினும், எனது அமைச்சு இதில் பங்களிக்கவுள்ளது என அவர் குறிப்பிட்டார். முன்னர் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் அடையாள அட்டைகள் வழங்கத் திட்டமிடப்பட்டிருந்த போதும், தற்போது மும்மொழி அடையாள அட்டை பற்றி ஆலோசிக்கப்படுகின்றது என மேலும் அவர் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டையின் முன் பக்கத்தில் சிங்களமே காணப்படுகின்றது. இதை மாற்றி மும்மொழி அடையாள அட்டையை வழங்குவதே எமது விருப்பமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# அவுஸ்ரேலியா செல்லமுயற்சி

## 97 பேர் கைதாகினர்



அவுஸ்ரேலியாவிற்கு தப்பிச் செல்ல முயற்சித்த 97 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவில் புகலிடம் கோரும் நோக்கில் குறித்த இலங்கையர்கள், படகு மூலம் பயணித்துள்ளனர்.

இலங்கைக் கடற் படையினர் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்களை திருக்கோவில் கடற்பகுதியில் வைத்து கைதுசெய்துள்ளனர். சந்தேக நபர்கள் காவற்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. 39 ஆண்களும், 18 பெண்களும் 40 சிறுவர் சிறுமியரும் இந்தக் கும்பலில் அடங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம், பதுளை, மன்னார், கிளிநொச்சி, சிலாபம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் ஒலுவில் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

# நாகரிகமான ஆடைகளை அணியுமாறு

# ஹிருணிகாவிற்கு நீதவான் ஆலோசனை

(கொழும்பு)

நாகரிகமான ஆடைகளை ஒழுங்காக அணிந்து வருமாறு கொல்லப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மகளான ஹிருணிகாவிற்கு நீதவான் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதவான் பிரகர்ஷ ரணசிங்க இந்த அறிவுறுத்தலை நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளார். பொரளையிலுள்ள வர்த்தக நிறுவன உரிமையாளரொருவரை மிரட்டித் தாக்கினார் என்ற குற்றச் சாட்டுத் தொடர்பில் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஹிருணிகா ஆஜராகினார்.

இதன்போதே, மேலதிக நீதவான் இந்த ஆலோசனையை வழங்கினார். அதன் பின்னரான வழக்கு விசாரணைக்கு இளஞ் சிவப்பு நிறகுர்தா மற்றும் காற்சட்டை அணிந்து ஹிருணிகா ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த வர்த்தகரைப் பயமுறுத்தித் தாக்கியதாக கூறப்படும் ஹிருணிகா மற்றும் நால்வர் மீதான வழக்கு நீதவானினால் இண்க்கப்பாட்டுக்கு அனுப்பப்பட்டது.

முறைப்பாட்டாளர் இந்தப் பிரச்சினையை இணக்க முறையில் தீர்க்க முடியும் எனக் கூறியதாக பிரதிவாதிகளின் வழக்குரைஞர்கள் தெரிவித்தனர்.

ஆனால், பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் மறுத்தார். ஆயினும் சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு முறைப்பாட்டாளரான தம்மிக்க செனவிரத்னவிடம் மன்னிப்புக் கேட்டால் மாத்திரமே இணக்க வழித் தீர்வைப் பற்றி கவனத்தில் எடுக்க முடியும் என நீதவான் கூறினார்.



அத்துடன், சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதித்த நீதவான், அவர்கள் இணக்க சபைக்கு போகவேண்டும் எனவும், ஜுலை 31ஆம் திகதி இணக்க சபையின் அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

# கணனி மயமாகும்

# கைதிகளின் தகவல்கள்

(கொழும்பு)

கணனி மயப்படுத்த இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவரமும், சிறைச்சாலை அமைச்சும் கூட்டாக இணைந்து நாட்டில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து கைதிகளின் தகவல்களையும் பதிய நடவடிக்கை எடுத்துள்ளன.

கைதிகளுக்கு புனர்வாழ்வளித்தல், அவர்களுக்கான வசதிகளை மேம்படுத்தல், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு கைதிகளின் தகவல்களை திரட்டி வைத்திருத்தல் அவசியமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெலிக்கடைச் சிறைச்சாலையை மையமாகக் கொண்டு இந்த தகவல்களை கணனி மயப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது. தகவல்களின் இரகசியத் தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தரம் குறைந்த டீசலுடன் வந்த

# கப்பலை விடுவிக்க எதிர்ப்பு

(கொழும்பு)

சிங்கப்பூர் நிறுவனம் இலங்கைக்கு வழங்கிய சிறந்த வகை டீசலுக்கு பதிலாக தரம்குறைந்த டீசலை சுமந்து வந்த வியட்நாம் கப்பலை விடுவிக்க இலங்கை-இந்திய எண்ணெய் நிறுவனம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கை - இந்திய எண்ணெய் நிறுவனம் முன்வைத்த முறைப்பாடு ஒன்றை அடுத்து குறித்த வியட்நாம் கப்பலை தடுத்து வைக்க மேல் நீதிமன்றம் தீர்மானித்தது.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நிதி வழங்கும் உறுதிப்பாட்டில் கப்பலை விடுவிக்குமாறு கப்பல் நிறுவனம் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி கேட்டுக் கொண்டார்.

எனினும், அவ்வாறு கப்பலை விடுவிக்க இலங்கை - இந்திய எண்ணெய் நிறுவனம் எதிர்ப்பு தெரிவித்தது.

சிங்கப்பூரில் விடுவிக்கப்பட்ட 4500 மெட்ரிக் தொன் சிறந்த டீசலுக்குப் பதிலாக தரம்குறைந்த டீசல் கொண்டுவந்ததால் 2 மில்லியன் டொலர் நஷ்டம் ஏற்பட்டுள்ளதென இலங்கை - இந்திய எண்ணெய் நிறுவனம் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் கப்பல் விடையம் குறித்து இரு தரப்பினரும் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு அதனை நீதிமன்றுக்கு அறிவிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கச்சதீவு மீளவும் வேண்டுமெனில்

# இந்தியத் தமிழரையும் அழையுங்கள்

## ஜெயலலிதாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றியுள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு லக்பலசேனா அமைப்பின் தலைவர் மருத்துவர் சுதத் மல்லிக்காராச்சி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக முதல்வருக்கு கச்சதீவு மீண்டும் பெற்றுக்கொள்ளும் தேவை ஏற்பட்டிருக்குமாயின் அதனை மீண்டும் பெற்றுக் கொள்ளட்டும்.

ஆனால், இலங்கையில் உள்ள 8 இலட்சத்து, 42 ஆயிரத்து 323 இந்தியத் தமிழர்களை மீண்டும் இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என அந்த அமைப்பு நிபந்தனை விதித்துள்ளது.

இந்திய அரசாங்கம் இதற்கு விருப்பம் தெரிவித்தால், தாமதமின்றி, அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளட்டும்.

தேயிலைத் தோட்டங்களில் வேலைக்கு ஆட்கள் தேவையாக இருந்தால், தென்சீனாவின் யுவான் மாகாணத்தில் அல்லது வியட்நாம் அல்லது லாவேஸ் ஆகிய நாடுகளில் ஒன்றில் இருந்து பௌத்த மதத்தைச் சேர்ந்த யுவதிகளை இலங்கை அழைத்து வரும் என்று மல்லிக்காராச்சி மேலும் கூறியுள்ளார்.

# மாத்தளை எலும்புக்கூடுகள்

# 25வருடங்களுக்கு உட்பட்டவை

## நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் அனைத்தும் 25 வருடங்களுக்குள் புதைக்கப்பட்டவை என்று மாத்தளை நீதிமன்றம் அறிவித்துள்ளது. ஆங்கில ஊடகம் ஒன்றின் தகவலின் படி இந்தச் சடலங்கள் 1987 ஆம் - 1990ஆம் ஆண்டுகளில் புகைக்கப்பட்டவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை வைத்தியசாலையில் கட்டட நிர்மாணத்துக்காக நிலம் தோண்டப்பட்ட போது, சுமார் 154 மனிதர்களின் எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் ஆய்வு மேற்கொண்ட களனி பல்கலைக் கழக பேராசிரியர்களின் குழு தமது அறிக்கையை மாத்தளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. இதன்படியே, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே, கொல்லப்பட்ட தமது ஜே.வி.பி உறுப்பினர்களுள் சடலங்களே இவை என்று தெரிவித்து வருகிறது. இந்த நிலையில் தற்போது இந்த நீதிமன்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது.


**5. கருத்தினைத் தமிழில் எழுதுக.**

1) Good Mirning : ..............................

2) Please come here : ..............................

3) What is this? : ..............................

**6. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைப் புள்ளிக் கோட்டின் மீது தமிழில் எழுதுக.**




♦ **7 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


7. ஆண்டுக்கு ஒரு தடவை மட்டும் காய்க்கும் பழம் எது?
1) பப்பாசி 2) மரமுந்திரிகை 3) வாழை 4) கொய்யா

8. காற்றின் உதவியுடன் பரவும் தாவரம் எது?
1) புன்னை 2) இருவேரி 3) சீதேவியார் செங்கழுநீர் 4) திப்பிலி

9. தண்டுகோதிப் புழுவினால் தாக்கப்படும் தாவரம் எது?
1) கத்தரி 2) புலோல் 3) குரக்கன் 4) நெல்

10. உருவில் காட்டப்பட்டுள்ள திருகாணியைப் பொருத்தப் பயன்படுத்தக்கூடிய மிகப் பொருத்தமான கருவி பின்வருவனவற்றில் யாது?






(1) (2) (3) (4)


## கடந்த திங்கட்கிழமை வெளியான பயிற்சி வினாத்தாளின் விடைகள்.


1) 


2) 

3) (3) B:H, C:E, D:F
4) (1) கற்ற கல்வி
5) (2) நற்பண்புகளை விருத்தி செய்தல்.
6) (2) ஒருவரின் சிறுவயதுப் பழக்கங்களை வைத்து அவரைப்பற்றி மதிப்பிடலாம்.
7) (3) முன்னை வந்த செவியைவிட பின்னர் வந்த கொம்பு பெரிது.
8) (2) 2011

9) (1) 

10) (1) 

11) (2) 

12) (1) 

13) (2) ரூபா 58
14) (2) ரூபா 14
15) (3) 1
16) (2) 3
17) (2) சிவப்பு நிற மின்குமிழ்கள்
18) (3) பச்சை, நீலம், சிவப்பு
19) (3) பெருக்கல்
20) (1) கூட்டல்
21) (3) அடுத்த வியாழக்கிழமை தாவீதின் மனைவிக்கு மட்டும் விடுமுறை கிடைக்கும்.
22) (2) 4 கிலோமீற்றர்
23) (1) 1 லீற்றர்
24) (1) 2.55
25) (3) இக் கண்ணாடியில் காட்டுபவர் எனது தாயாரின் ஒரே மகளாவார்.



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013 | பகுதி - II | 1 மணி 15 நிமி

# கல்வி முரசு



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

*கடந்த திங்கட்கிழமை வெளியான வினாக்களின் தொடர்ச்சி.....*

**26 தொடக்கம் 34 வரையுள்ள வினாக்களுக்கு உரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

| | | |
|---|---|---|
| வித்து | திகதி | பதவி |
| தும்பு | தந்தி | புனித |


26. அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைப் புள்ளிக் கோடுகளின் மீது எழுதுக.

பதவி வித்து தும்பு .................. .................. ..................

27. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரில் இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் கருத்துள்ள சொற்களை அமைத்து இப் புதிரை நிரப்புக. தரப்பட்டுள்ள உதவிக் கூற்றுக்களைப் பயன்படுத்துக.


இடமிருந்து வலம் : 1. வெள்ளை நிறப்பறவை.
: 3. அகத்திற்கு எதிரானது.

மேலிருந்து கீழ் : 1. மிருகங்களுக்கு உண்டு.
: 2. நீரை அள்ளலாம்.



28. 1 ஆம் 2 ஆம் தராசுகளில் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நிறைகளின் மொத்தத்தை அவதானிக்க. மூன்றாம் தராசில் உள்ள பொருள்களின் நிறை எத்தனை கிலோகிராம்?


1 ஆம் தராசு 2 ஆம் தராசு 3 ஆம் தராசு



கிலோ கிராம் 6 கிலோகிராம் 8 கிலோகிராம் ..................

..................

**29. பின்வரும் பொருட்களின் விலைகளின் கூட்டுத்தொகையைப் பார்த்து புத்தகத்தின் விலையைக் காண்க.**




புத்தகத்தின் விலை ..................


..................

30. இங்கு அதிக தடவைகள் குறிக்கப்பட்டுள்ள இலக்கம் யாது?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 5 | 3 | 8 | 2 | 6 | 5 |
| 4 | 3 | 4 | 2 | 9 | 6 | 3 | 2 |


..................

31. சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.





எழுத்து W இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது? ....................

32. ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.




இலக்கம் 6 இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள இலக்கம் யாது? ....................

நிமல், விமல், அமல் என்னும் மூவர் உடற்பயிற்சிக்காக நடந்து செல்லும் மூன்று பாதைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்கள் மூவரும் பயணத்தை ஆரம்பிக்கும் இடங்கள் A,B,C என்ற எழுத்துக்களாலும், முடிவிடங்கள் X,Y,Z என்ற எழுத்துக்களாலும் குறிக்கப்படுகின்றன.




33. இம்மூவரிடையே எவர் மிக நீளமான பாதையில் பயணம் செய்கிறார்?

..............................................................................................

34. இம்மூவரும் தத்தம் பயணப் பாதைகளில் நடந்து செல்லும்போது அதிக தடவைகள் தமது இடப்பக்கமாகத் திரும்பியவர் யார்? ..............................................



## வினாத்தாள் II

**1. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசிக்க.**

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

கன்றை நினைந்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்.

பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும்போது
காலம் பார்க்க வேண்டும்.

**பாடல் அடிகளைக்கொண்டு (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) 'அறம்' என்ற கருத்தைத் தரும் சொல் ஒன்று எழுதுக. ....................
2) தொண்டுகளில் பெரியது எனக் கவிஞர் கருதுவது எதனை? ....................
3) 'உள்ளம் கசிதல்' என்பதன் பொருள் யாது? ....................
4) 'நாம் நினைத்தோம்' என்பதனை ஒருமையில் மாற்றி எழுதுக ....................
5) தந்தை, தாயைக் குறிக்கும் ஒரு சொல் எழுதுக. ....................
6) பசுவின் இளமைப் பெயர் யாது? ....................

8) இங்கு இடம்பெறும் முன்னிலை, பன்மைப் பெயர்ச்சொல்லை எழுதுக. ....................
9) கவிஞர் 'கன்றை' யாருக்கு ஒப்பிடுகின்றார்? ....................
10) பருவம் பார்த்துப் பயிர்செய்தல் என்ற கருத்தைத் தரும் பழமொழி ஒன்றை எழுதுக. ....................

**2. சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

1) கதைகள் / பற்றிய / பலவற்றை / குளங்கள் / சேகரித்தான் / மோகன்

..............................................................................................

2) கடக்க / மஞ்சள் / பயன்படுத்துவோம் / கோட்டையே / எப்போதும் / பாதையை

..............................................................................................

**3. வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

1) இந்த ஆண்டு எங்கள் பாடசாலையின் ........................................ விழா எமது அதிபரின் தலைமையில் நடைபெற்றது.
( பறிசழிப்பு, பரிசளிப்பு, பரிசலிப்பு, பரிசழிப்பு)

2) வாழ்க்கையில் நாம் முன்னேற ........................................ செய்ய வேண்டும்.
(முயற்சி, முயர்ச்சி, ஆராய்ச்சி, முயட்சி)

3) லூயி பாஸ்டர் ........................................ யில் ஈடுபட்டார்.
( ஆராச்சி, ஆராட்சி, ஆராய்ச்சி, ஆராட்ச்சி)

4. 1) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

( books, pencils, stamps, bags)

2) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.



# தமிழக தீர்மானம் குறித்து பிரதமர் முடிவெடுப்பார்



இலங்கைக்கு எதிராக தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய இணையமைச்சர் நாராயண சாமி, இது குறித்து பிரதமர், தகுந்த முடிவெடுப்பார் என நம்பிக்கை தெரிவித்தார். இலங்கைத் தூதர் கரியவாசம், தனது அதிகாரத்துக்கு உட்பட்டுப் பேசவேண்டும் எனவும் நாராயணசாமி வலியுறுத்தினார்.

காஷ்மீரை பிரித்துக்கொடுக்க பாகிஸ்தான் கோரினால் தமிழக மாணவர்களின் முக்கிய கோரிக்கையான தமிழீழம் தொடர்பாக இந்தியா வறபுறுத்தினால், காஷ்மீரை தனியாகப் பிரித்துக் கொடுக்க பாகிஸ்தான் வலியுறுத்தினால் நிலைமை என்னவாகும் என நாராயணசாமி கேள்வி எழுப்பினார். காஷ்மீரில் மனித உரிமை மீறப்பட்டதாக ஐ.நா சபையில் தீர்மானம் கொண்டு வந்தால் இந்தியா ஏற்றுக்கொள்ளுமா? எனவும் வினவினார்.

நேற்று முன்தினம் இலங்கைக்கு எதிரான தமிழக மாணவர்களின் போராட்டம் தொடர்பாக, சட்டப் பேரவையில் தி.மு.க, இடதுசாரி கள் மனித நேய மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் நேற்று சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தன. அப்போது தமிழீழம் அமைய பொது வாக் கெடுப்பு நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை தாக்கல் செய்து முதலமைச்சர் ஜெயலலிதா பதிலளித்துப் பேசினார். இலங்கையில் இறுதிப்போர் முடிவுக்கு வந்த பின்னர் மூன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் எவ்வித அடிப்படை வசதியுமின்றி முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு வருவதாக ஜெயலலிதா தெரிவித்தார். இலங்கை விவகாரத்தில் தி.மு.க. இரட்டை வேடம் போடுவதாகவும் ஜெயலலிதா குற்றம்சாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியச் செய்திகள்


# உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டபடி சரணடைவாராம் சஞ்சயதத்



1993 மும்பை குண்டுவெடிப்பு வழக்கில் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள பொலிவுட் நடிகர் சஞ்சய தத் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்ட நேரத்திற்குள் சரணடையப் போவதாகக் கூறி கண்ணீர் விட்டார். 1993 மும்பை குண்டுவெடிப்பு வழக்கில் பொலிவுட் நடிகர் சஞ்சய் தத்துக்கு தடா நீதிமன்றம் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இந்தத் தண்டனையை 5 ஆண்டுகளாக குறைத்து கடந்த வாரம் உச்ச நீதிமன்றம் தீர்ப்ப ளித்தது. சஞ்சய் இந்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யலாம் என்றும் கூறப்பட்டது. மேலும் அவர் 4 வரத்திற்குள் சரணடைய வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. அவர் ஏற்கனவே 18 மாதங்கள் சிறையில் இருந்து விட்டு பிணையில் வெளியே வந்ததால் 3 ஆண்டுகள் 5 மாதம் சிறையில் இருந்தால் போதும். இந்நிலையில் சஞ்சய் தத்துக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்று பாலிவுட் பிரபலங்கள் உட்பட பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்நிலையில் அவர் நேற்று செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். அப்போது அவர் கூறுகையில், நான் மன்னிப்பு கேட்டு விண்ணப்பிக்கவில்லை. உச்ச நீதிமன்றத்தின் முடிவை மதிக்கிறேன். நீதிமன்றம் குறிப்பிட்ட 4 வாரத்திற்குள் சரணடைவேன் என்றார். இதைக் கூறிவிட்டு அவர் அருகில் அமர்ந்திருந்த சகோதரி பிரியா தத்தை கட்டிப்பிடித்து அழுதார். பின்னர் அழுது கொண்டே காரில் ஏறிச்சென்றார்.

# உட்கட்டமைப்பை மேம்படுத்த ஜப்பான் அளிக்கிறது கடனுதவி

இந்தியாவில் உட்கட்டமைப்பு வசதிக்காக ரூ.12,650 கோடி கடனுதவி தர ஜப்பான் முன்வந்துள்ளது. ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் புமியோ கிஷிடாவை இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். அப்போது நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இந்தியாவில் உட்கட்டமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளவும், மும்பையில் சுரங்கப் பாதைத் திட்டத்துக்காகவும் 2.32 பில்லியன் டொலர்கள் கடனுதவி வழங்க ஜப்பான் ஒப்புக் கொண்டுள்ளது. இதுகுறித்து, இந்திய வெளியுறவு அமைச்சர் குர்ஷித் கூறும் பொழுது, இந் நிதியுதவியின் மூலம் இந்தியாவில் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்படுத்தப் படும். ஏற்கெனவே ஜப்பான் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட டில்லி மெட்ரோ இரயில் திட்டம் இலட்சக்கணக்கான இந்தியர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது என்றார். மேலும், புதிய கடனுதவியின் மூலம் டில்லி - மும்பை இடையேயான சிறப்பு சரக்கு இரயில் பாதை, சுரங்கப்பாதை திட்டம் மேற்கொளளப்படும். மேலும் அதிவேக இரயில் திட்டங்கங்களை செயற்படுத்தவும் இரு தரப்பும் ஒப்புக் கொண்டுள்ளன. பாதுகாப்புத் துறையிலும் ஒத்துழைப்பு அதிகரித்துள்ளது. ஆசியாவின் இரு பெரும் ஜனநாயக நாடுகளான ஜப்பானும், இந்தியாவும், ஆசிய - பசுபிக் பகுதியில் தங்கள் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் ஒப்புக் கொண்டுள்ளன என்றார் குர்ஷித்.



## கூடங்குள அணுமின்நிலையம் அடுத்தமாதம் செயற்படும்

### பிரதமர் உறுதியளிப்பு



கூடங்குளம் அணுமின் நிலையத்தின், முதற் கட்டப் பிரிவு, அடுத்த மாதம் முதல் செயற்படும், என, பிரதமர் மன்மோகன் சிங், தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்க நாட்டின், டேர்பன் நகரில் நடக்கும், பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, பிரதமர் மன்மோகன்சிங் சென்றுள்ளார். நிதியமைச்சர் சிதம்பரம், வர்த்தக அமைச்சர், ஆனந்த் சர்மா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர், சிவசங்கர மேனன் உள்ளிட்டோர் பிரதமருடன் சென்றுள்ளனர். பிரேசில், ரஷ்யா, தென் ஆபிரிக்க தலைவர்களை டர்பன் நகரில், பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்து பேசினார்.

கடந்த செவ்வாய் இரவு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை சந்தித்த பிரதமர் கூறியதாவது: கூடங்குளம் அணுமின் நிலையத்தில், முதற கட்டப் பிரிவு, ஏப்ரல் மாதம் செயற்படத் தொடங்கும். இந்த அணுமின் நிலையத்தின், மூன்றாவது மற்றும் நான்காவது பிரிவுகளைத் தொடங்குவது குறித்து, ஆலோசிக்கப்பட்டு வருகிறது. விரைவில், அந்த பிரிவுகளும் தொடங்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் நடந்து வருகின்றன என்று மன்மோகன்சிங் கூறினார்.





## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ......................................

முகவரி : ......................................

பிறந்த ஆண்டு : ......................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

......................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# சிலுவை சொல்லும் செய்தி

(எசாயா 52 : 13 - 53 : 12)

(யோவான் 18 : 33 - 19 :16, 25 - 36)

**தீர்ப்பு என்ன?**

இயேசு பிலாத்துவின் முன்பு விசாரணைக்குக்கொண்டுவரப் பட்டார். ஆனால் தடுமாற்றமும், குழப்பமும், பயமும் பிலாத்துவிடம்தான் காணப்பட்டதேயொழிய இயேசுவிடம் அல்ல. பிலாத்து முன்பு இயேசு கைதியாக அல்ல, மாட்சிமிக்க அரசனாக நிற்கின்றார் என்பதை யோவான் எமக்கு மிகத்தெளிவாகக் காட்டுகின்றார். 'நீ அரசன் தானோ?' என்ற பிலாத்துவின் கேள்விக்கான பதில் அவனுடைய உதடுகளிலிருந்தே வருகின்றது என்று இயேசு கூறுகின்றார். எனினும் தனது அரசும், அரசாட்சியும் இந்த உலகத்திற்குரியதல்ல. தான் அன்பிற்கு அரசன், அகிம்சைக்கு அரசன் சத்தியத்திற்கு அரசன் அரசர்க்கெல்லாம் அரசன் என்பதை இயேசு நிறுவுகின்றார்.

இயேசு நிரபராதி என்பதை பிலாத்து தெட்டத்தெளிவாக அறிந்திருந்தான். அவரை விடுவிக்க ஆவல் கொண்டிருந்தான். எத்தனையோ எத்தனங்களை மேற்கொண்டான். இயேசுவை சித்திரவதை செய்து யூதர் முன்பு கொண்டு வந்து "இதோ மனி தன்" என்று பிலாத்து சொன்னது இதோ பரிதாபத்திற்குரிய மனிதன் என்ற கருத்தில் மட்டுமல்ல, இதோ உண்மையான மனிதன், இதோ உத்தம மனிதன், இதோ இலட்சிய மனிதன் என்ற அபிமானத்தோடும் மதிப்போடும்தான்.

அதேவேளை இயேசு 'இறைமகன்' என்று கேள்விப்பட்டபோது அவன் அஞ்சினான், தடுமாறினான், 'நீ எங்கிருந்து வருகின்றாய்? எனக்குச் சொல்' என்று அதட்டுகின்றான். ஆனால் இயேசுவோ மௌனம் கடைப்பிடிக்கின்றார். பிலாத்துவே அதற்கான பதிலைச் சொல்லட்டும் என்பதுபோல் மௌனம் சாதிக்கின்றார். அந்த மௌனம் பிலாத்துவை விசாரணைக் கூண்டில் நிறுத்துவது? உனது தீர்ப்பு என்ன? என்று தீர்ப்புச்சொல்பவனையே கேள்வி கேட்டு நின்றது.

இயேசுவைப் பற்றி எங்கள் தீர்ப்பு என்ன? என்று எங்கள் மனச்சாட்சியைக் கூண்டில் நிறுத்தித் தீர்ப்பு வழங்கச் சொல்கிறார் யோவான்.

**சிலுவை அடியில் பெண்கள்:**

"கடவுளைப் பழிப்பவன்" என்று சமயபீடம் கண்டனம் செய்த சமயவிரோதியின் சிலுவை அடியில் இந்தப் பெண்கள் நிற்கின்றார்கள் அரசவிரோதி என்று, உரோமை அரசு கண்டனம் செய்த ஓர் குற்றவாளியின் சிலுவை அடியில் இந்தப் பெண்கள் நிற்கின்றார்கள் இதற்கு எவ்வளவு துணிவு வேண்டும்.

சிலுவை அடியில் அவர்களின் பிரசன்னம் சமய ஆட்சிப்பீடத்தையும், அரச ,ஆட்சிப் பீடத்தையும் கேள்வி கேட்கும் பிரசன்னம். மௌனமாக அந்த ஆட்சிப் பீடங்களைக் கண்டனம் செய்யும் பிரசன்னம். அந்த ஆட்சிப் பீடங்களை உதாசீனம் செய்யும் பிரசன்னம் அவர்கள் நிற்பது குற்றம் சுமத்தியவர்கள் பக்கம் அல்ல. குற்றம் சுமத்தப்பட்டவர்கள் பக்கம். நீதி எந்தப் பக்கம்? நாம் எந்தப் பக்கம்?

**வெற்றி முழக்கம்:**

"எல்லாம் நிறைவேறிற்று" என்று இயேசு செய்யும் வெற்றி முழக்கம் யோவான் நற்செய்தியில் மட்டுமே வருகிறது. யோவானைப் பொறுத்தமட்டில் வெற்றி சிலுவையில் அறைந்தவர்களுக்கு அல்ல. சிலுவையில் அறையப்பட்டவருக்கே. யோவானைப் பொறுத்தமட்டில் இயேசுவின் உதடுகளில் உதிரும் கடைசி வார்த்தை வெற்றி வார்த்தையே! சாவிலும் இயேசு வெற்றி வேந்தர், இயேசு சாவை வென்ற வெற்றி வேந்தர்.

**இயேசு பஸ்கா ஆட்டுக்குட்டி:**

யோவானைப் பொறுத்தமட்டில் உலகில் பாவங்களைச் சுமக்கும் தேவ ஆட்டுக்குட்டி, பஸ்கா ஆட்டுக்குட்டி இயேசுவே. இயேசு 'தாகமாயிருக்கிறேன்' என்று சொன்னாலும் ஈசோப்புத் தண்டில் கடற்பஞ்சைப் பொருத்தி புளித்த திராட்சை இரசம் தரப்பட்டதும் யோவானைப் பொறுத்தமட்டில் திருப்பாடல் 69 : 21, வி.பி. 12 : 22 என்ற மனவாக்கின் நிறைவேற்றம். இயேசுவின் எலும்பு முறிக்கப்படாததும். யோவானைப் பொறுத்த மட்டில் பஸ்கா ஆட்டுக்குட்டியை நினைவுபடுத்துகிறது. (எண் 9 : 12) நம் விடுதலைக்காக, பாவப்பரிகாரத்திற்கரகப் பலியானவர் இயேசு. சிலுவை மரணத்தின் உலகிற்கான செய்தி இதுவே.

**இரத்தமும் தண்ணீரும்:**

இயேசுவின் பக்க விலாவிலிருந்து இரத்தமும், தண்ணீரும் வெளியேறியது என்று யோவான் உரைக்கும் போது அது நமது மீட்பின் ஊற்று என்பதையே எமக்கு நினைவுபடுத்துகின்றார். திருமுழுக்கு, திருவிருந்து என்ற இரண்டு திருவருட் சாதனங்களை நமக்கு நினைவுபடுத்துகின்றார்.

வி.பி.தனேந்திரா.

# வடகொரிய அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்குத் தயார்

## அமெரிக்கா அறிவிப்பு



(வோஷிங்டன்)
வடகொரியா தொடர்பான எந்தவொரு அச்சுறுத்தலையும் எதிர்கொள்வதற்கு தயாராக உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. கொரிய தீபகற்பத்தில் வடகொரியாவின் நடவடிக்கைகளால் பதற்றம் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு தொலைதூர இலக்கைத் தாக்குகிற ஏவுகணையை ஏவி வடகொரியா வெற்றி கண்டது. கண்டம விட்டுக் கண்டம் பாய்ந்து தாக்குகிற ஏவுகணையையும் அந்தநாடு தயாரித்து வருகிறது. இதனால் தென் கொரியாவுக்கும், அமெரிக்காவுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச வல்லுநர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்காவுக்கும், தென் கொரியாவுக்கும் எதிராக வட கொரியா போர் ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த நாட்டின் பீரங்கிப்படைகளும், ஏவுகணைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே, தென் கொரியாவுடனான இராணுவ தொலைத்தொடர்பு வசதியைவட கொரியா நேற்றுமுன்தினம் துண்டித்தது. முன்னதாக தென் கொரியாவுடன் வடகொரிய அதிகாரி பேசும்போது, தற்போதைய நிலையில் எந்தக்கணமும் போர் மூளலாம். எனவே, வடகொரியா தென்கொரியா ராணுவ தொலைத்தொடர்புக்கு அவசியமில்லாமல் போய்விட்டது எனக் கூறினார்.

தென்கொரிய பெண் அதிபர் பார்க்கிற்கும் வடகொரியா எச்சரிக்கையும் விடுத்துள்ளது. தனது நாவை அவர் கண்காணித்துக்கொள்ள வேண்டும் என வடகொரியா கூறி உள்ளது.

இந்த நிலையில், வடகொரியாவின் மிரட்டலைச் சந்திக்க அமெரிக்காவும் தயார் நிலையில் உள்ளது. இது தொடர்பாக அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனின் செய்தித் தொடர்பாளர் ஜோர்ஜ் லிட்டில் நிருபர்களிடம் பேசுகையில், வடகொரியாவின் மிரட்டலுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

அப்போது அவர், எந்தவொரு நெருக்கடி நிலையையும் சந்திக்க அமெரிக்கா தயார் நிலையில் இருக்கிறது. அவர்கள் (வடகொரியா) கொரிய தீபகற்பத்தில் இப்படி மிரட்டல் விடுப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். அவர்களது மிரட்டல் யாருக்கும் உதவாது. எந்தவொரு சூழலிலும் பதிலடி கொடுக்க அமெரிக்கா தயார் நிலையில் உள்ளது எனக் கூறினார்.

## ஒருவாரகால ஓய்விற்குப் பின்னர் செயற்பட ஆரம்பித்தது கியூரியாசிட்டி



ஒருவாரம் செயற்படாமல் இருந்த, "கியூரியாசிட்டி" விண்கலம் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.செவ்வாய்க கிரகத்தில் உயிர்கள் வாழ்வதற்கான சூழல் உள்ளதா என்பதைக் கண்டறிய, அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான, "நாசா" கடந்த, 2011ஆம் ஆண்டு, கியூரியாசிட்டி விண்கலத்தை, அனுப்பியது.கடந்த ஆண்டு, ஆகஸ்ட் மாதம், செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கிய இவ்விண்கலம், பல்வேறு சோதனைகளில் ஈடுபட்டுள்ளது. அங்குள்ள பாறையில், துளையிட்டு அதன் துகள்களை ஆராய்ந்து வந்தது.

இந்நிலையில், கணனியில் ஏற்பட்ட கோளாறினால், கடந்த, 17ஆம் திகதி முதல், கியூரியாசிட்டியின் செயற்பாடு நின்று போனது. சீரமைப்பு பணிக்குப்பின், கியூரியாசிட்டி தற்போது, மீண்டும் செயற்பட தொடங்கியுள்ளது.இத்தகவலை, நாசாவின் துணைத் திட்ட மேலாளர் ஜிம் எரிக்சன் தெரிவித்துள்ளார்.அடுத்த மாதம், 4ஆம் திகதி முதல், ஒருமாதத்துக்கு, செவ்வாய்க் கிரகத்துக்கும் பூமிக்கும் இடையிலான தகவல் தொடர்பு, சூரியனால் பாதிக்கப்படும். அச்சமயத்தில், கியூரியாசிட்டியின் செயற்பாடு மீண்டும் நிறுத்திவைக்கப்படும்.வரும், மே,முதல், மீண்டும் செயற்பட உள்ள இவ்விண்கலம், மற்றொரு பாறையில் துளையிட்டு சோதனை செய்ய உள்ளது.

## அரசியலிலிருந்து மில்லிபான்ட் ஓய்வு



இங்கிலாந்தின் லேபர் கட்சியைச் சேர்ந்த முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் டேவிட் மில்லிபான்ட்(47), தனது எம்.பி. பதவியை ராஜிநாமா செய்வதாக அறிவித்துள்ளார் அவரின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து நியூயோர்க் செல்ல உள்ளார். பின்னர், அங்குள்ள சர்வதேச மீட்புக் குழு (ஐஆர்சி) என்ற தொண்டு நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பேற்க உள்ளார். சர்வதேச மீட்புக் குழுவில் இணைந்து பணியாற்றுவதை, உலகம் முழுவதும் ஆதரவற்ற மக்களுக்கு பணியாற்ற கிடைத்த வாய்ப்பாகக் கருதுகிறேன் என்று டேவிட் மில்லிபான்ட் தெரிவித்தார்.

சர்வதேச மீட்புக் குழு, அறிவியல் விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீனால் 1930ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. டேவிட் மில்லிபான்டுக்குப் போட்டியாக அவரது சகோதரர் எட் மில்லிபான்ட் உருவெடுத்து வருகிறார் என்று பேசப்பட்டது. ஆனால், கட்சியிலிருந்து ராஜிநாமாச் செய்வதாக டேவிட் அறிவித்ததைத் தொடர்ந்து, யூகங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.


## ஆடம்பர மாளிகையில் தங்க விரும்பாத பாப்பரசர்

(வத்திக்கான்)
புதிய பாப்பரசர் பிரான்சிஸ், எளிய வாழ்க்கைக்கு சொந்தக்காரர். ஆர்ஜன்டீன நாட்டைச்சேர்ந்த இவர் பாப்பரசர் தேர்வுக்கு வந்த போது, வத்திக்கான் நகரில் உள்ள டோமஸ் சந்தா மார்த்தா என்ற நவீன ஹோட்டல் அமைப்புக்கொண்ட இல்லத்தில் தங்க ஆரம்பித்தார். கடந்த 13ஆம் திகதி பாப்பரசராக தேர்வு செய்யப்பட்ட பின்னரும் அவர் இந்த இல்லத்தைக் காலி செய்யவில்லை.

12 விசாலமான அறைகளைக் கொண்ட பாப்பரசர் மாளிகைபுதுபிக்கப்பட்டு, பாப்பரசர் பிரான் சிஸ் குடியேறத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர் தற்போது தங்கி வருகிற எளிய இல்லத்தில் தொடர்ந்து இருக்கத்தான் விரும்புகிறார்.

இந்தத் தகவலை வத்திக்கான செய்தித்தொடர்பாளர் பெடரிகோ லம்பார்டி தெரிவித்தார்.

தற்போது பாப்பரசர் தங்கியுள்ள இல்லத்தில் முதலில் ஒற்றை அறையில்தான் அவர் இருந்தார். பாப்பரசராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் பல்வேறு நாட்டு பிரமுகர்களை தினமும் சந்திக்க வேண்டி இருப்பதால் அதற்கு வசதியாக அவர் சூட்டுக்கு (ஒன்றுக்கு மேற்பட்ட அறைகளைக் கொண்ட வசதியான குடியிருப்பு) மாறியுள்ளார்.



## கார்கில் போர் தொடர்பாக பெருமை அடையும் முஷாரப்



(இஸ்லாமாபாத்)
- இந்தியாவின் எல்லைப்பகுதியான கார்கிலில் இடம்பெற்ற போர் குறித்து தான் பெருமையடைவதாக அண்மையில் பாகிஸ்தான் திரும்பிய அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் தெரிவித்தார். இந்தியாவின் எல்லைக்குள் கடந்த, 1999ஆம் ஆண்டு நுழைந்த பாகிஸ்தான் இராணுவம் கார்கில் பகுதியை ஆக்கிரமிக்க முயன்றது. இந்திய இராணுவம் நடத்திய அதிரடித்தாக்குதலால் பாகிஸ்தானின் முயற்சி தோல்வியில் முடிந்தது. இந்த தாக்குதல் நடைபெற்ற போது பாகிஸ்தான் இராணுவத் தளபதியாக முஷாரப் பதவி வகித்தார்.

சமீபத்தில் பாகிஸ்தான் திரும்பிய முஷாரப்பிடம் இச்சம்பவம் தொடர்பாக நிருபர்கள் கேட்டனர், அதற்குப் பதிலளித்து அவர் கூறியதாவது:-

பாகிஸ்தானைப் பற்றியும் பாகிஸ்தானியர்களைப் பற்றியும் சிந்திப்பவர்களில் நானும் ஒருவன். கார்கில் நடவடிக்கைக்காக நான் பெருமைப்படுகிறேன். எனது தலைமையின் கீழ் பாகிஸ்தான் செழிப்பாக இருந்தது. அப்போது சமூக விரோத சக்திகள் மற்றும் தீவிரவாதத்திற்கு எதிராக நான் தைரியமாகக் குரல் எழுப்பினேன். பாகிஸ்தானின் நலனை முன்னிட்டு தீவிரவாதத்திற்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான போரை ஆதரித்தேன்.


இந்த முடிவை நான் எடுத்திராவிட்டால் பாகிஸ்தானின் எதிர்காலம் வேறுமாதிரி ஆகியிருக்கும். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முத்தாஹிதா குவாமி இயக்கத்தின் செல்வாக்கு நிறைந்த கராச்சியில் போட்டியிடுவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வளர்ச்சி வங்கி அமைக்க பிரிக்ஸ் மாநாட்டில் முடிவு

தென் ஆபிரிக்காவின் தலைநகரில் நடைபெறுகிற பிரிக்ஸ் மாநாட்டில் இதன் உறுப்பு நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்காவின் நிதி அமைச்சர்கள் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் பிரிக்ஸ் நாடுகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த தேவையான நிதியை வழங்க 'பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி' அமைக்க உடன்பாடு ஏற்பட்டது.

வளர்ச்சி வங்கியை அமைப்பது என்பது முக்கியமான முடிவு. உலக வங்கி, இந்த வங்கியுடன் இணைந்து செயற்பட்டு இரு வங்கிகளின் செயற்திறனை அதிகரிக்கச் செய்யும் என்று உலக வங்கி செய்தி வெளியிட்டுள்ளது




தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் நடைபெற்று வரும் பிரிக்ஸ் மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், சீன அதிபர் ஜீ ஜின்பிங், தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் ஜூமா, பிரேசில் ஜனாதிபதி தில்மா ரூசெப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோர் ஒன்றாக புகைப்படத்திற்கு காட்சி அளித்ததைக் காணலாம்.

# தமிழக எதிர்ப்பு அலை மகிந்த ஆட்சிக்கு எதிரானதே

## புதுவிளக்கம் சொல்கிறார் மங்கள

(கொழும்பு)

தமிழ்நாட்டில் இடம்பெறும் எதிர்ப்புகள் மற்றும் ஜெனிவா பிரேரணை என்பன இலங்கைக்கு எதிரானதல்ல எனவும் அது ராஜபக்ஷ தலைமைக்கு எதிரானது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நீதி, நியாயத்தை சிறுதுளியேனும் பொருட்படுத்தாது ஆட்சி நடத்திச் செல்லும் ராஜபக்ஷ தலைமையின் ஊழல் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து 2014 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மூன்றரைக் கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள அறத்தலாவ பிக்குகள் கொலை சித்திரத்தை பார்வையிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சித்திரத்தில் புலிகள் பிக்குகளை தாக்கிய பகுதியைப் பார்வையிடவில்லை என அவர் நினைவுபடுத்தினார்.

அவ்வாறு அவர் பார்வையிடாமல் விட்டமைக்குக் காரணம் இம்முறை தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கச் சென்றபோது, ஜனாதிபதியை வரவேற்றது கருணா அம்மானும் பிள் ளையானும் என மங்கள சமரவீர சுட்டிக் காட்டினார். சிங்கள பௌத்தர்கள் என சொல்லிக் கொண்டு முஸ்லிம் மக்களுக்கு இடையூறு செய்வோர் பௌத்த குடிமகன்கள் அல்ல எனவும் அவர்கள் குண்டர் கும்பல்கள் எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் இலங்கை பிக்குகளை தாக்கிய அதிதீவிரவாதிகள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள மங்கள சமரவீர இலங்கையில் பௌத்த அதி தீவிரவாதிகள் தண்டிக்கப்படவில்லை என கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

# குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கிறது எஸ்.எல்.பி.சி.

பி.பி.சி. தமிழோசைக்கு இலங்கையில் எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்தவில்லை என இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. தமிழோசை அலைவரிசைக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தார்பனத்தால் இடையூறு ஏற்படுத்தப்பட்டதாக பி.பி.சி. முன்வைத்த குற்றச்சாட்டை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நிராகரித்துள்ளது.

இடையூறு ஏற்படுத்தப்படுவதாக தமக்கு அறிவிக்கப்பட்டவில்லை என இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க ஏ.எப்.பி செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

எனினும் பி.பி.சி. வானொலி நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பண்பலை சேவை மூலம் ஒலிபரப்புவதென்பதை 26 மார்ச் செவ்வாய்க்கிழமை முதல் பி.பி.சி. இடைநிறுத்திக் கொள்கிறது.

இத்தகவலை பி.பி.சி. உலக சேவையின் இயககுநர் பீட்டர் ஹோரக்ஸ் வெளியிட்டார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் பி.பி.சி. தமிழோசை நிகழ்ச்சிகள் தொடர்ந்து இடையில் தடுக்கப்படுவது மற்றும் வேறு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாவது போன்றவை தொடர்ந்து நடந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எமது நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கேட்டுவரும் நேயர்களுக்கு இந்த சேவை தரப்படுவதில் ஏற்பட்டிருக்கும் இத்தடை குறித்து நாங்கள் வருந்துகிறோம், ஆனால் எங்களது நிகழ்ச்சிகளை குறிவைத்து இது போன்ற இடைஞ்சல்கள் நடப்பது, அந்த நேயர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை பாரிய அளவில் மீறுவதான ஒருசெயல் இதை பி.பி.சி. அனுமதிக்க முடியாது. என பீட்டர் ஹோரக்ஸ் தனது அறிவிப்பில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற நடவடிக்கை ஒன்றை பி.பி.சி. 2009 ஆம் ஆண்டில் அதன் சேவை இடைஞ்சலுக்கு உள்ளானபோது எடுத்திருந்தது.

# பயங்கரவாதம் ஒழிப்பு; அமெரிக்காவுக்கு உதவத் தயார்

## ஜாலிய விக்கிரமசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத ஒழிப்பு குறித்து அமெரிக்காவிற்கு உதவிகளை வழங்கத் தயார் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோககில் இவ்வாறு பயங்கரவாத ஒழிப்பு குறித்த ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கத் தயார் என அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற பகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் முனைப்புக்களுக்கு ஆதரவு வழங்கும் சந்தர்ப்பம் அமெரிக்காவிற்கு காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். கல்வி, கடலோரப் பாதுகாப்பு, சக்தி வளம் மற்றும் சுற்றுலாத்துறை போன்ற பல்வேறு துறைகளில் முதலீட்டாளர்கள் தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் தொடர்பில் கவனிக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சரியான பாதையில் நகர்வதாகவும், அமெரிக்காவுடனான உறவுகளை விஸ்தரிக்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எதிர்பாராத சவால்களை சந்திக்க நேரிட்டதனால் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை அமுல்படுதது வதல் தாமதம் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமைப் பாதுகாப்பு, மேம்பாடு என்பன குறித்து இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான நல்லிணக்கம் மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கும் நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்படக்கூடாது எனவும் போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட அரசாங்கம் முயற் சித்து வருவதாக தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

### பட்டதாரி...


மார்ச் மாதம் 31ஆம் திகதியன்று ஒருவருட பயிற்சியை நிறைவு செய்யவுள்ள பட்டதாரி பயிலுநர்கள் மட்டும் சேவையில் நிரந்தரமாக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டீ.அபேகோன் குறிப்பிட்டார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உட்பட மேலும் சில அமைச்சுக்களில் அவர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

பயிற்சிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட மேலும் 43,700 பட்டதாரிகளுக்கும் எதிர்காலத்தில் கட்டம் கட்டமாக நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

### பரீட்சைப்...

தென அவர் குறிப்பிட்டுள்ளார். (சா.த.) பரீட்சை இடம்பெற்ற போது ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மீள் பரீட்சை நடைபெற்றதால் பெறுபேறு வெளியாவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.



காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன்கோவில் பங்குனி மாத வருடாந்த உற்சவத்தின் போது சிவனும் உமையம்மையும் பரிவார மூர்த்திகளோடு தேரில் ஆரோகணிப்பதற்காக கோபுர வாசலின் முன் எழுந்தருள்வதைக் காணலாம். (50)

### பிரதியமைச்சர்...

என பிரட் அடம்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 400 தொடக்கம் 600 பொலிஸார் விடுதலைப் புலிகள் அமைப்பினரிடம் சரணடைந்ததாகவும், அவர்களில் பலர் கருணாவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த போது சித்திரவதை செய்யப்பட்டதாகவும் சிங்கள, முஸ்லிம் பொலிஸார் கொலை செய்யப்பட்டதாகவும் மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

எனினும் பி.பி.சி.க்கு பேட்டியளித்துள்ள கருணா, அந்த சம்பவங்களோடு தன்னை தொடர்பு படுத்தாமல் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் பிரட் அடம்ஸ் சுட்டிக் காட்டினார்.

1990 ஆம் ஆண்டு 75 முஸ்லிம்கள் படுகொலை மற்றும் மட்டக்களப்பில் 200 பொதுமக்கள் படுகொலை என்பவற்றுடன் கருணா குழுவினருக்கு தொடர்பு இருப்பதாக மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் சிறுவர்களை படையில் இணைத்துக் கொண்டதாக 2004 ஆம் ஆண்டு மனித உரிமைகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் வீடு, வீடாகச் சென்று சிறுவர்களை படையில் சேர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டமைக்கு கருணாவிற்கு முக்கிய பங்கு இருப்பதாகவும் நேற்றைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் வடக்கு, கிழக்கில் குடும்பங்களை அச்சுறுத்தி, பாடசாலை செல்லும் சிறுவர்களை கடத்தியதாக மனித உரிமைக் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகிய பின்னரும் இலங்கை அரச படைகளுடன் இணைந்து குற்றச் செயல்களில் செயற்பட்டதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் மோசமான குற்றச் செயல்களில் ஈடுபட்ட கருணா, இப்போது அரச வரப்பிரசாதங்களை அனுபவித்து வருவதாக பிரட அடம்ஸ் குறிப்பிட்டார்.

### இன்னும்....

இவர்களுடன் இந்த மாதத்தில் இன்றுவரை 56 பேர் இந்த வைத்தியசாலையில் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றைய தினம் இவ்வாறு எவரும் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகி அனுமதிக்கப்படவில்லை என்றும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (பா)

### மாணவர்களை...

இழிவாகவும் அக் கவிதையில் சித்தரித்ததாகத் தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வவுனியா பேருந்து நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தின் போது, வன்னி பிரதேச மாணவர்களை இழிவுபடுத்தி பத்திரிகையில் கவிதை வெளிவந்த நிலையிலும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைதியாக இருந்தனர் எனத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசமெழுப்பினர்.

இதன் போது இளைஞர் சேவைகள் மன்றத்தில் தொழில் கல்வி பயிலும் இளைஞர், யுவதிகள் உட்பட பொதுமக்கள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர். (160)

### புலிகளின்...

தெரிவித்துள்ளது.

இதேவேளை, பதிவு இரத்து செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் தேவையாயின் மீண்டும் பதிவு செய்துகொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்ரிய அறிக்கையொன்றின் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட கட்சிகள் மீண்டும் தம்மைப் பதிவுசெய்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் கூறியுள்ளார்.

இதன் பிரகாரம் பதிவு இரத்தாக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்கள் மற்றும் சின்னங்களை மேலும் இரண்டு வருடங்களுக்கு புதிதாக அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யும்போது பெற்றுக்கொள்ள முடியாது என்றும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

ஈழதேசிய ஜனநாயக முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய மாற்று முன்னணி ஆகிய அரசியல் கட்சிகளின் பெயர்களையும் சின்னங்களையும் மீண்டும் வழங்காதிருக்க தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

# மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு முன்பள்ளிக் கல்வியே அத்திவாரம்



(நாவற்குழி).

மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு அத்திவாரமாக விளங்குவது அவர்கள் தமது சிறுபராயத்தில் கற்கும் முன்பள்ளிக் கல்வியே அவர்களை சிறந்த கல்விமான்களாக மாற்றும் என ஈபி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

நாவற்குழி அரும்புகள் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், சிறார்களின் நற்பழக்கவழக்கங்கள், அவர்களின் சிறந்த தலைமைத்துவ பண்பினை வளர்ப்பதில் முன்பள்ளிக் கல்வியானது மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. அத்துடன் முன்பள்ளிச் சிறார்களை பல சிரமங்களின் மத்தியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சி முன்பள்ளி ஆலோசகர், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அழகையா டயஸ் இம்மானுவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முருகைக்கல் கடத்தல்; சீனப்பிரஜைகள் கைது

(கொழும்பு)

உயிருடன் காணப்பட்ட அரிய வகையான 24 முருகைக்கல் ஜதாராக்களையும் 2 சிப்பிகளையும் ஏற்றுமதி செய்ய முயற்சித்ததாகக் கூறப்படும் சீன பிரஜைகள் மூவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளதாக சுங்க பல்லுயிரினப் பிரிவு தெரிவித்துள்ளது.

முருகைக் கற்களும் சிப்பிகளும் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளதால் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் சட்டப்படி ஏற்றுமதி செய்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முருகைக்கல் ஜதாராக்களையும் சிப்பிகளையும் எடுத்துக்கொண்டு சந்தேக நபர்கள் சீனாவின் ஸங்காய்க்கு செல்வதற்கு முயன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மத்தல சர்வதேச விமான நிலையத்தில் பணியாற்றிய இந்த சந்தேக நபர்கள், ஹிக்கடுவையில் முருகைக்கல் ஊரிகளை சேகரித்ததாக கூறியுள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# கல்விமானி பட்ட கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கமுடியாது தவிக்கும் ஆசிரியர்கள்

(துணுக்காய்)

ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கான கல்விமானி பட்ட கற்கைநெறியைக் கற்க விண்ணப்பிக்க முயன்ற துணுக்காய் கல்வி வலய ஆசிரியர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியைப் பெறமுடியாததால் ஏமாற்றமடைந்துள்ளனர்.

தமது இந்த நிலை குறித்து குறிப்பிட்ட ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலினிடமும் முறையிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

மூன்றுவருட கற்கைநெறியைக் கொண்ட கல்விமானி பட்ட கற்கைநெறி என்ற கல்விநெறியைக் கற்பதற்கு விண்ணப்பிக்கும் முடிவுத் திகதி 31.03.2013 என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்ய விரும்பிய ஆசிரியர்கள் இதற்கான விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து சமர்ப்பிக்க வேண்டியிருந்தது.

படிவங்களைப் பூர்த்திசெய்து பெரும் போக்குவரத்து சிரமங்களின் மத்தியில் உள்ள துணுக்காய் கல்வி வலய ஆசிரியர்கள் வலயக் கல்விப் பணிமனைக்கு நேற்றுச் சென்றுள்ளனர். அங்கு வலயக் கல்விப் பணிப்பாளர் இல்லாததால் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்த முடியாது தவித்துள்ளனர்.

இந்நிலையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் வலயக் கல்விப் பணிப்பாளருக்குப் பதிலாக இந்த ஆசிரியர்களின் தொழிற்கல்விக்கு உறுதிப்படுத்த தயக்கம் காட்டியுள்ளனர்.

இதனால் நேற்று ஏமாற்றத்துடன் திரும்பிய 15 இற்கும் மேற்பட்ட துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த பல்வேறு பாடசாலைகளின் ஆசிரியர்கள் இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலினிடம் முறையிட்டுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் இது குறித்து தாம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இந்த ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்படுமாயின் அனைத்து ஆசிரிய தொழிற்சங்கங்களையும் இணைத்து தகுந்த நடவடிக்கை எடுப்பபதாகவும் உறுதியளித்துள்ளார். (12)

# வெளிநாட்டு தூதரகங்கள் இடமாற்றம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சில வெளிநாட்டு இராஜதந்திர அலுவலகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன. பங்களாதேஷ், கொரிய மற்றும் ஈராக் ஆகிய நாடுகளின் அலுவலகங்களே தற்காலிக மற்றும் நிரந்த அடிப்படையில் இடமாற்றப்பட்டுள்ளன.

இதனால், கொழும்பு - 7 வோட் பிளேஸில் கடந்த பல வருடங்களாக இயங்கி வந்த பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலயம் கடந்த வாரம் முதல் இடமாற்றப்பட்டுள்ளது. தற்போது இல. 03 கிரகரிஸ் வீதி கொழும்பு - 7 என்ற முகவரிலேயே பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலயம் செயற்படுகின்றது. இதேவேளை, ஈராக் தூதுவராலயமும் இடமாற்றப்பட்டுள்ளது. புனரமைப்பு வேலைகள் காரணமாக கொழும்பு - 7 பான்ஸ் பிளேஸில் இயங்கிய ஈராக் தூதுவராலயம், 32 ஆம் மாடி ஜெய்க் ஹில்டன் என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு - 7, தர்மபால மாவத்தையில் செயற்பட்டு வந்த கொரிய தூதுவராலயம் புனரமைப்பு வேலைகள் காரணமாக இல. 41, ஹில்பர் கிரஸன்ட் கொழும்பு - 7 என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இடிந்து விழுந்தது படிக்கட்டு; மாணவர்கள் 30 பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பு தேசிய நூதன சாலையில் உள்ள படியொன்று இடிந்து வீழ்ந்ததில் குறைந்தது 30 மாணவர்கள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த மாணவர்கள். கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 2.20 மணிளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சிறு காயங்களே ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# வாகனப்பதிவில் சரிவு

(கொழும்பு)

பெப்ரவரி மாதத்தில் வாகனப் பதிவுகள் 23,544 ஆக பதிவாகியிருந்தன. இது கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 44 வீதம் வீழ்ச்சியாகும்.

இதில் இந்திய கார் வகையான மாருதி கடந்த ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 88 வீதம் வீழ்ச்சியடைந்திருந்தது. பி.எம்.டபிள்யூ. கார் வகைகள் 411 வீத அதிகரிப்பை காண்பித்திருந்தன.

குறிப்பாக மோட்டார் கார் வாகனப்பதிவுகள் கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து ஜனவரி மாதம் வரையிலான காலப்பகுதியினுள் சற்று அதிகரித்து 1435 எனும் எண்ணிக்கையில் காணப்பட்ட போதிலும், பெப்ரவரி மாதத்தில் 1076 ஆக வீழ்ச்சியடைந்திருந்தது. முச்சக்கர வண்டிகளை பொறுத்தமட்டில் ஜனவரி மாதத்தில் 8178 ஆக காணப்பட்ட பதிவுகள், பெப்ரவரி மாதத்தில் 6478 ஆக வீழ்ச்சியடைந்திருந்தன. மோட்டார் சைக்கிள்களுக்கு 14002 இலிருந்து 11941 எனும் பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

சொகுசு கார்கள் மீது அரச துறையை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரிவிலக்களிப்புக்கு அமைவாக இந்த பி.எம்.டபிள்யூ ரக சொகுசு கார்கள் பெருமளவில் கொள்வனவு செய்யப்படுகின்றன என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மூன்றாவது ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றி



(பல்லேகல)

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் பல்லேகலவில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 302 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டில்ஷான் 125 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக ரசாக் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு பங்களாதேஷ் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது மழை குறுக்கிட்டமையால் 27 ஓவர்களில் 183 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 26 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து பங்களாதேஷ் வெற்றியிலக்கை அடைந்தது. இதில் நசீர் ஹுசைன் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களைப் பெற்று பங்களாதேஷ் வெற்றிபெற வழிவகுத்தார். மற்றும் அனமுல் ஹக் 40 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் மூலம் தொடர் 1:1 என்ற சமநிலையில் முடிவடைந்தது.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் நாளை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஊரெழு, ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வல்லை, வடமராட்சிப் பிரதேசம், வடமராட்சி கிழக்கு பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மல்லாகம், ஏழாலை, மயிலங்காடு, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, மாவிட்டபுரம், கீரிமலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், முடமாவடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, பாற்பண்ணைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

1.04.2013 திங்கட்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் கோண்டாவில் பலாலி வீதியிலிருந்து அன்னங்கை வரையான பிரதேசம், பளை மாசார் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

2.04.2013 செவ்வாய்க்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் அச்செழுப் யாக்கருப் பிரதேசம், நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, மாலுசந்தி முதல் இரும்பு மதவடி மடத்தடி வரையான பிரதேசம், கரணவாய் அண்ணாசிலையடிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

3.04.2013 புதன்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் கோண்டாவில் பலாலி வீதியிலிருந்து அன்னங்கை வரையான பிரதேசம், நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, வதிரிப் பிரதேசம், அல்வாய் பிரதேசத்தின் ஒரு பகுதி, திக்கம் ஆகிய இடங்களிலும்

4.04.2013 வியாழக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி, சுப்பர்மடம் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.